03TH
MAY
2025

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 இதழ்: 77 பக்கங்கள் - 15 editor.uthayam@gmail.com

# குட்டித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## வாக்குப் பெட்டிகள் திங்களன்று விநியோகம்!

## 336 சபைகளுக்கு தேர்தல்; இரவு 10 மணிக்குள் முதல் முடிவு!!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.இத் தேர்தலை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளதாக தேர்தல் ஆணையாளர் சமன் ரத்னாயக தெரிவித்தார்.

திங்கட்கிழமை காலை தேர்தலுக்கான முதற் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் அன்றைய தினம் காலை ஆரம்பமாகும். தேர்தல் தினத்தன்று காலை 7.00 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிக்கு நிறைவு பெறவுள்ளது.

இதன்பின் வட்டாரத்திலுள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்குகள் எண்ணப்பட்டு வட்டாரத்தின் வெற்றியாளர் யார் என அறிவிக்கப்படும். இதன்பின் வட்டாரங்களின் மொத்த முடிவுகள் தேர்தல் மத்திய நிலையங்கள் மூலம் அறிவிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளும். முதலாவது தேர்தல் முடிவை இரவு 10.00 மணிக்குள் அறிவிக்க முடியுமென தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# பிரச்சாரங்கள் இன்றுடன் நிறைவு

## ஊடகங்களுக்கான அறிவுறுத்தல்கள்! தேர்தல் ஆணைக்குழு!!

வாக்கெடுப்பிற்கு நாற்பத்தெட்டு(48) மணி நேரத்திற்கு முன்னர் அதாவது இன்று நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் உள்ளூார் அதிகார சபைகள் தேர்தலில்

02ம் பக்கம்பார்க்க...

# ஜூன் மாதம் முதல் அதிகரிக்கும் மின் கட்டணம்

மின்சாரக் கட்டணத்தில் ஓரளவு விலை அதிகரிப்பு ஏற்படுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வு வரும் ஜூன் மாதம் முதல் அமுலுக்கு வரும் என்றும், கடந்த டிசம்பர் மாத மின் கட்டணத்தை விட இது அதிகமாக இருக்காது என்றும் அவர் கூறினார்.

மேலும், ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் மின் விலை திருத்தத்தின்படி இந்த விலை திருத்தம் செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மின்சார சபையின் 220

02ம் பக்கம்பார்க்க...

# வெகு விமரிசையாக நடைபெற்ற பாரம்பரியம் நூல் வெளியீட்டு விழா

### 5 இலட்சம் கொடுத்து முதற் பிரதிபெற்ற சபுமல் உரிமையாளர் கமால்தீன் ஹாஜி



கலாபூஷணம் எம். எஸ். எம். ஜின்னா இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் தொகுத்தளிக்கப்பட்ட "பாரம்பரியம்" நிகழ்ச்சியை

02ம் பக்கம்பார்க்க...

# சிறிது அவகாசம் தாருங்கள்: நாட்டைக் கட்டியெழுப்புவோம்

## அற்ப விஷயங்களுக்காக ரோட்டில் இறங்க வேண்டாம்

## மே தின உரையில் ஜனாதிபதி வேண்டுகோள்

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எமக்கு சிறிது காலம் அவகாசம் தாருங்கள். மக்களின் உணர்வுகளை நாங்கள் நன்குணர்ந்துள்ளோம்.யாரும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. என ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் நடைபெற்ற மாபெரும் மே தின நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

சிறிய கோரிக்கைகளுக்காக வீதிகளில் இறங்கிப்

06ம் பக்கம்பார்க்க...



# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இன்றும், நாளையும் பட்டமளிப்பு விழா

## சவூதி தூதுவருக்கு கௌரவம்



(அஸ்ஹர் ஆதம்)

சஊதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின்

04ம் பக்கம்பார்க்க...

# ஆறு வயது பலஸ்தீன் சிறுவன் கொலை

## குற்றவாளிக்கு 53 ஆண்டுகள் சிறை!

### அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு!

6 வயது பாலஸ்தீன அமெரிக்க சிறுவனைக் கொன்று சிறுவனின் தாயாரைக் கடுமையாக காயப்படுத்திய அமெரிக்கா

03ம் பக்கம்பார்க்க...

# மக்களை ஏமாற்றி வரும் அரசுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்

## மே தின உரையில் சஜித் பிரேமதாச



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, 2028 ஆம் ஆண்டில் இலங்கையின் கடன்களை திருப்பிச் செலுத்தும்போது இலங்கை ஆபத்தை

06ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## பிரச்சாரங்கள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

போட்டியிடுகின்ற கட்சிகள்ஃ குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பான அனைத்து பிரச்சார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இன்று நடைபெற்ற இறுதி அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகள் மற்றும் விபரங்களை நாளை தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசையில் ஒரு பிரதான செய்தி அறிக்கையில் மாத்திரம் பிரச்சாரம் செய்ய முடியும்.

2025.05.04 ஆம் திகதியன்று வெளியாகின்ற செய்தித்தாள்களில் அக்கூட்டங்களின் புகைப்படங்களையும் அறிக்கைகளையும் வெளியிட முடியும்.

ஒவ்வொரு அலைவரிசையோடும் செய்தித்தாளோடும் இணைந்த சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய அனைத்து சமூக ஊடக தளங்களின் நிருவாகிகளுக்கும் இந்த நிபந்தனைகள் பொருந்தும்.

இறுதி பிரச்சாரக் கூட்டங்களின் விவரங்களை வெளியிடும்போது அனைத்து கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகள் மற்றும் செய்தித்தாள்களில் முறையே ஒளிபரப்பு நேரம் மற்றும் இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

04.05.2025 அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளில் அன்றைய நாளிதழ்களின் தலைப்புச் செய்திகளை வெளியிடும் போது நாளிதழ்களின் தலைப்புச் செய்தியை மட்டுமே வெளியிட வேண்டும்.

05.05.2025 மற்றும் 06.05.2025 செய்தித்தாள் தலைப்புச் செய்திகளை வழங்குவதிலோ அல்லது வேறு எந்த வகையிலும் கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர்களை ஊக்குவிப்பதன் மூலமோ அல்லது அவர்களை புண்படுத்தும் எந்தவொரு தோற்றத்தையும் காட்டுவதன் மூலமோ எந்தவொரு அரசியல் பிரச்சார செய்திகளும் செய்யப்படக்கூடாது.

உரிமம் பெற்ற தேர்தல் அலுவலகங்கள் அதாவது ஒவ்வொரு பிரிவுக்கும் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்தில் தாபிக்கப்பட்ட ஊடக அலுவலகங்கள் மற்றும் நியமிக்கப்பட்ட பிரிவு அலுவலகங்கள் இன்று 2025.03.03 முதல் 2025.05.07 வரை இயக்கப்படும்.




## கொழும்பு மா நகர சபை தேர்தலில் அஷ்கர் ஏ சமத் போட்டி

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரும் கொழும்பு சாஹிராக் கல்லூரி கல்முனை சாஹிராக் கல்லூரி பழைய மாணவருமான அஷ்கர் ஏ சமத். இம்முறை கொழும் மாநகர சபைத் தேர்தலில் கிருல வாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் தேர்தல் கேட்கின்றார்.



கொழும்பில் ஹமீத் அல் ஹூ சைனியாவிலும் தனது ஆரம்பக் கல்வியை பயின்று அக்கல்லூரியிலும் பேருவளை அலஹூமைசரா , கல்லூரி, தெஹிவளை மீலாத் வித்தியாலயம், சேர் ராசிக் பரீட் வித்தியாலயங்களில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

இப்பிரதேச வாழ் மக்களது அன்றாட அடிப்படை பிரச்சினைகளை அரசியல் அங்கிகாரத்துடன் சேவை செய்வதற்கே இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மாநகர சபையில் தேர்தல் குதிக்கின்றார்.

மறைந்த தலைவர் எம். எச்.எம் அஷ்ரப் அவர்களின் ஆலோசகரக அவரது அமைச்சில் அவருடன் இணைந்து பல்வேறு சேவையாற்றிய ஓய்வு பெற்ற மறைந்த எம்.எச்.ஏ சமத் அவர்களின் இரண்டாவது புதல்வர் ஆவார்.

## வெகு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அடியொட்டி, அன்னாரினால் எழுதப்பட்ட ”பாரம்பரியம்” நூல் வெளியீட்டு விழா கொழும்பு 7 இல் அமைந்துள்ள விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் “டன்கன் வைட்“ கேட்போர் கூடத்தில் நேற்றைய நாள் (27.04.2025) காலை இடம்பெற்றது.

முஸ்லிம் சேவைக்குப் பங்களிப்பு வழங்கிய மூத்த கலைஞர்களுடன் உறவாடும் தொகுப்பே ”பாரம்பரியம்” ஆகும். இது முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எஸ். எம். ஹனீபாவால் தொடங்கப்பட்டது.

நூலாசிரியர் எம்.எஸ்.எம் ஜின்னா அவர்கள் 2017 முதல் 150 க்கும் மேற்பட்ட கலைஞர்களை சந்தித்துள்ளார். இந் நிகழ்ச்சி முஸ்லிம்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்பது அதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும். 546 பக்கங்களைக் கொண்ட ”கனதிமிக்க” நூலிது. 2018 முதல் இந் நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஷியா ஆ து குயவாஅைய சுஎைழளலைய வழங்கி வருகின்றார்.

நேற்றைய நிகழ்ச்சியின் சிறப்புப் பேச்சாளராக உலக அறிவிப்பாளரும், ‘வானொலியில்ஒரு வழிப்போக்கன்’ நூலின் ஆசிரியருமான அப்துல் ஹமீத் கலந்துகொண்டார்கள். உள்ளத்தைத் தொட்டுச் சென்ற அவரது உரையில், ”நூலுருப் பெற்றுள்ள இந்த ஆவணமானது, “நூலகம்“ ழேழடயாயஅ ழேழடயாயஅ இணையத்தளத்திலும் பாதுகாக்கப்படல் வேண்டும்” எனக்குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் பேராசிரியர் உதித்த கயஷான் குணசேகர அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இவ்விழாவுக்குக் கலாபூஷணம் அலி அஃபர் யுடை யுமடியச ளு ஆ அவர்கள் தலைமை தாங்கினார்.

நூலின் முதற் பிரதியை மாவனல்லை, ஸபுமல் நிறுவன அதிபர் அல்ஹாஜ் று.ஆ.ஆ.ளு.ஆ. கமால்தீன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். தென் இந்தியா, கோயம்புத்தூரைச் சேர்ந்த எழுத்தாளர் டாக்டர் எம். அமீர் அல்தாப் யுஅநநச யுடவாயக உட்பட பல பிரமுகர்கள் மேடையில் வீற்றிருந்த இவ்விழாவில் நூல் பற்றிய தனது கண்ணோட்டத்தை கலாநிதி ஆ.ஊ. ரஸ்மின் ( South Asian broadcasting policy analyst) வழங்க, சட்டத்தரணி கலாபூஷணம் ரஷ ீத் எம் இம்தியாஸ் ஐஅவாலையண சுயளாநநன ஆ நூலாராசிரியரை கவிதை பாடிக் கௌரவித்தார்.

## ஜூன்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பில்லியன் கடன் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் ஒரு பகுதி மின்சார கட்டணத்தில் சேர்க்கப்படும் எனவும் அவர் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளார்.







# அரநாயக்க பிரதேச சபைக்கு மூன்று முஸ்லிம்கள் போட்டி

அரநாயக்க பிரதேச சபைக்கு மூன்று முஸ்லிம்கள் போட்டியிடுகின்றனர். எதிர்வரும் ஆறாம் திகதி உள்ளூராட்சி தேர்தலில் 30 அங்கத்தவர்களை கொண்ட அரநாயக்க பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம் எஸ் எம் றிபாய், தேசிய மக்கள் சக்தி சார்பில் அமீன் தாரீக், தேசிய மக்கள் சக்தி சார்பில் எம் எஸ் எம் றிஸான் ஆகியோர் போட்டியிடுகின்றனர். 2011 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சக்தி மூலம் அரநாயக்க பிரதேச சபைக்குப் போட்டியிட்டு அரசியலுக்குள் பிரவேசித்த சுபியான் றிபாய், 1183 வாக்குகளைப் பெற்ற போதும் கட்சி சார்பில் ஐந்து பிரதிநிதிகளே தெரிவானதன் காரணமாக அவருக்கு சபையில் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 2018 ஆம் ஆண்டு தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு தெரிவானார். வட்டாரத்தில் 50 மில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட வேலைத்திட்டங்களை செய்து முடித்திருப்பதாக றிபாய் தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் அமீன் தாரீக் அகில இலங்கை ஜனாஸா கமிட்டியில் கேகாலை மாவட்ட குழு அங்கத்தவராக பணிபுரியும் அதேவேளை, மாவனல்லை வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும் பணிபுரிகிறார். இவர் மூலம் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரதேசத்திற்கு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் றிஸான் சாலிஹ் தொழில் முனைவராக இருப்பதோடு, ஊரின் அபிவிருத்திக்கு பல வகையிலும் உதவிகளை வழங்கி இருப்பதாக தெரிவித்தார். பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்திருப்பதாகவும் அரநாயக்க தொகுதியில் தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கிய வட்டாரத்தில் 3500 வாக்குகள் உள்ளன. இவற்றில் 1900 முஸ்லிம் வாக்குகளை இவர் கையகப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தனகலை அபிவிருத்திற்கு பாரிய நிதி ஒதுக்கீடு

**கஹட்டோவிட்ட கூட்டத்தில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க**



அத்தனகலை அபிவிருத்திற்கு பாரிய நிதி ஒதுக்கீடு. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அததனகலையின் வெற்றி மிக முக்கியமானது.எதிர் காலத்தில் அத்தனகலை பிரதேச எல்லைக்குள் பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்க ப்படும் என பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். அத்தனகலை பிரதேச சபையின் கஹட்டோவிட்ட வட்டார தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களான இன்சாப்,ஜவாத் ஆகியோரை ஆதரித்து கஹட்டோவிட்டவில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஈட்டிய வெற்றியை விட பாரிய வெற்றியை உள்ளூராட்சி தேர்தலில் நாம் பெறுவோம்.அது நிச்சயமானது.

கஹட்டோவிட்ட வட்டாரத்தில் சேவையாற்றிய நல்ல மனிதர் இன்சாப் தான். அவர் அனுபவமுள்ளவர். சேவைகளை ஆற்றியுள்ளவர். அவரையும்ஜவாதையும் வெல்ல வைத்து கஹட்டோவிட்டவின் அபிவிருத்திக்கு சகலரும் பங்காற்றுங்கள் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.


***வாசகர்களே!***

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்







## தென்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹமூத் அல்கஹ்தானி நேற்று சனிக்கிழமை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு பொதுப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு விஷேட உரையாற்றினார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று 03 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம் பெற்றதுடன் இன்று 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா முன்னிலையில் பதில் உப வேந்தர் ஏ.எல்.ஏ.மஜீத் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நேற்று இடம் பெற்ற நிகழ்வில் மூன்றாவது அமர்வில் கலந்து கொண்டு இலங்கைக்கான சஊதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி உரையாற்றினார்.

தூதுவர் இங்கு உரையாற்றுகையில்

இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு அளப்பெரியது. குறிப்பாக இப்பிராந்தியத்திலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் இப்பல்கலைக்கழகம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை எனது இரண்டாவது வீடாக நான் மதிக்கிறேன்.இதன் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் சஊதி அரேபியா தன்னாலான அனைத்தையும் செய்யும்.நீங்கள் எந்நேரமும் எங்களது கதவுகளைத்தட்டமுடியும்.

உங்களுக்கு உதவி செய்ய நாம் எப்போதும் தயாராகவுள்ளோம்.இந்நிகழ்வில் கலந்து கொள்ள என்னை அழைத்தமையையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

சஊதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானியினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 MAY 03 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அமைதியான தேர்தலுக்காக அனைவரும் ஒத்துழைப்போம்

இம்மாதம் ஆறாம் திகதி நாடளாவிய ரீதியில் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

தொடராக தேர்தல்கள் நடைபெறுவதனால் நாட்டின் பொருளாதார நிலையைக் கருதி, மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பாக குறைந்த ஆர்வமே இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். உள்ளூராட்சி மன்றங்களை பொறுத்தவரையில் மக்களது அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்த ஒரு நிறுவனமாக இருக்கின்றன. எனவே இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளாக யாரை தெரிவு செய்ய வேண்டும் என்பதில் வாக்காளர்கள் விழிப்பாக செயல்படுவது அவசியமாகும். தம் பிரதேசங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கவுள்ள இத் தேர்தலில் நேர்மையான ஊழலற்ற அற்ப சலுகைகளுக்காக மக்களது வாக்குகளை விலை பேசாதவர்களை தெரிவு செய்வதற்காக வாக்களிப்பது அவசியமாகும். முஸ்லிம் வாக்காளர்களுக்கு தேசிய சூரா சபை விடுத்துள்ள வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டிருப்பதன் படி இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களில் நாட்டின் சட்ட திட்டங்களையும் உயர்ந்த பட்சம் கடைப்பிடிப்பதற்கு சகலரும் தேர்தலில் ஆர்வம் காட்ட வேண்டும். நீங்கள் தேர்வு செய்யும் வேட்பாளர் நேர்மையானவர்களாகவும், இனங்களுக்கு இடையே ஐக்கியத்தை பேணி நடப்பவராகவும், மக்களது தேவைகளை உரிய இடங்களில் முன்வைத்து பேசி நிறைவேற்றக் கூடியவராகவும் இருப்பவருக்கே வாக்களியுங்கள். நாட்டு மக்கள் மத்தியில் பிரதிநிதியாக வருபவர்கள் தனது தனிப்பட்ட நலங்களுக்கு முன்னுரிமை அளிப்பவராக இல்லாதிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். முஸ்லிம்கள் இந்நாட்டில் சிறுபான்மை சமூகமாக இருப்பதனால் எம்மவரது செயற்பாடுகள் மற்ற சமூகங்களுக்கு இடையில் முன்மாதிரியாக அமைய வேண்டியது அவசியமாகிறது.

முஸ்லிம் சமூகத்தின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் இதனை மனதில் வைத்து செயல்பட வேண்டும். இவ்வாறான மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளை அவதானித்து, சில நேரங்களில் அந்நியர்கள் எமது சமூகத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இந்த விடயத்தில் நாங்கள் திறமையான, காரியங்களை சாதிக்கக்கூடிய அபேட்சகர்களை தேர்வு செய்வதே மிகவும் முக்கியமானதாகும். தேர்தல்களில் வாக்களிப்பது மார்க்கக் கடமை என்பதையும் மறந்து விடக்கூடாது.

தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு இயன்றவரை ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வாக்குச்சாவடிகளில் சட்டத்தை மதித்து செயல்பட வேண்டும். முஸ்லிம் பெண்கள் ஹிஜாபுடன் செல்லும்போது பெண் உத்தியோகத்தர்களுக்கு தனது அடையாளத்தை காட்டி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தலின் பின்பும் அமைதியாக இருந்து சமாதானத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தலின் பின்பு வன்முறைகள் இடம் பெற ஆதரவளிக்கக்கூடாது. தேர்தல் முடிவுகள் மக்களின் தீர்மானமாகும். தான் வாக்களித்தவர் தெரிவானாலும் இல்லாவிட்டாலும் அனைவரும் மக்களின் தீர்ப்பை மதித்து செயல்படுவது அத்தியவசியமாகும்.






2025 மே மாதம் 6ம் திகதி நடைபெறவுள்ள பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக துந்துவ, தொடகனத்த, வியந்துவ, அலகாக்க, அதுன்காகொட ஆகிய பகுதிகளை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அஷ்பர் ஆமிர் போட்டியிடுகின்றார்.

மேலும் பிரதேச சபை ஊடாக செய்யக் கூடிய அபிவிருத்தி வேலைகளை சிறந்த முறையில் செய்யக் கூடிய ஆற்றல் அவரிடம் காணப்படுவதாக பிரதேச மக்கள் நம்பிக்கையோடு உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

தனது அரசியல் பயணத்தில் தனது பிரதேச அபிவிருத்தி தொடர்பில் அஷ்பர் ஆமிர் கருத்து வெளியிட்டிருந்தார். அதில், ” ஊரில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும், அதிலும் இப் பிரதேச பாடசாலை வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு அவரால் முடிந்த பங்களிப்பை செயய்வதாகவும், ஊரின் குப்பை கூளங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளிற்கு நிரந்தர தீர்வுக்கு அவசியமான திட்டத்தை வரக் கூடிய புதிய சபையில் முன் வைப்பதாகவும் உறுதி மொழி அளித்தார்.

அடுத்து வடிகால் அமைப்புகளை சுத்தம் செய்தல் மற்றும் ”மகப்பேற்று” நிலையத்தின் முன் மழை காலத்தில் சாக்கடை நீர் நிரம்புவதால் மக்கள் இன்னல் படுகின்றனர். இதை சுத்தம் செய்வது தன் பிரதான நோக்கமாகும் எனவும் குறிப்பிட்டார். இது தவிர அடிக்கடி ஊரை இருளில் மூழ்க வைக்கும் வீதி மின் விளக்குகளை சீரமைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், இது தவிர எதிர்காலத்தில் தமது கிராமத்திற்கு அனைத்து நல்ல திட்டங்களை சபை மூலம் அமுல் படுத்த நான் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இது போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகளையும் பெற்று தருவதாகவும், எதிர்கால பிரதேச சபைக்கு தான் தெரிவானால் நிச்சயம் கடமையுணர்வோடு செயல் பட காத்திருப்பதாகவும் அஷ்பர் ஆமிர் குறிப்பிட்டார்.

# வேற்றுமைகளை மறந்து மு.கா.வின் வெற்றிக்காக அணி திரளுங்கள்:

## ஹிஸ்புல்லாஹ் எம்.பீ.

(பீ.எம். முக்தார்)

களுத்துறை மாநகர சபை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் வேட்பாளர் ஆமிர் நஸீர் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்...

களுத்துறை மாநகர சபை தேர்தலில் இப்பிரதேச மக்கள் ஒன்றுபட்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். களுத்துறை மாநகர சபையின் முதலாவது மேயர் என்ற பெருமையை தலைமை வேட்பாளர் ஆமிர் நஸீர் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பகுதியில் ஐந்து வட்டாரங்களில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவானால் மேலும் மூன்று போனஸ் ஆசனங்கள் கிடைக்கும் எனவே களுத்துறை மக்கள் இந்த அறிய சந்தர்ப்பத்தை தவறவிட கூடாது.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி பதிவு செய்வதற்கு 5000 பேர் வரையிலான மக்கள் கையொப்பமிட்டு பெரும் பங்களிப்புச் செய்ததை எம்மால் ஒரு போதும் மறக்க முடியாது எனவே களுத்துறை மக்கள் எல்லா வேற்றுமைகளையும் மறந்து கட்சிக்கு வாக்களித்து சிறந்த நிர்வாகம் ஒன்றை தெரிவு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன் போது முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஹாஜியார் முன்னால் மாகான சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். நஸீர் ஹாஜியார் உட்பட பலரும் இங்கு உரையாற்றியிருந்தனர்.



## சிறப்பாக நடைபெற்ற ஷாதுலிய்யா இ:.வான்களுக்கான செயலமர்வு



(பீ.எம். முக்தார்)

பேருவளை சீனங்கோட்டை சாதுலியா இஃவான்களுக்கான தர்பிய்யா ஆன்மீக செயலமர்வு மே 01 ஆம் திகதி பேருவளை அம்பேபிடிய சஹிரு விலா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சீனங்கோட்டை பள்ளிச்சங்க இனைச் செயளாளரும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவற்று குழு உறுப்பினருமான கலீபதுஷ் ஷாதுலி அஷ்-ஷேஹ் இஹ்ஸானுதீன் அபுல் ஹஸன் (நளீமி) நிகழ்விற்கு தலைமை வகித்தார்.

நாடறிந்த பிரபல பேச்சாளர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்-ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி), மாத்தரை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அல்-ஹாஜ் இக்ராம் நிஸார் (அல்-பாஸி), பிரபல இஸ்மிய பேச்சாளர் கலீபதுல் ஐதுஷரூசியதுல் காதிரி மௌலவி எம்.எம். முஸ்தகீம் (நஜாஹி), கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம். பாரூக் (மக்கி) உட்பட ஸ/ன்னத் வல் ஜமாஅத் வளவாளர்களால் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டமை இங்கு றிப்பிடத்தக்கது.

மௌலவி அஷ்ரப் ஹஸன் (முர்ஸி) சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் முன்ஷிதீன்கள் மற்றும் சிறார்களின் கஸீதாக்களும் இடம் பெற்றமை விஷேட அம்சமாகும்.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம். ரபீக் ( பஹ்ஜி) சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலியா கலாபீட அதிபர் உஸ்தாத் மௌலவி எம். அஸ்மிகான் முஅய்யதி ஆகியோர் துஆ பிரார்த்தனை நடாத்தினர்.

சீனன்கோட்டப் பள்ளிச்சங்க உப தலைவர் அஷ்-ஷேக் எம்.எஸ்.எம். ரிழ்வான் (நளீமி) இனைச் செயலாளரான அல்ஹாஜ எம்.எம்.எம். சிஹாப் , அல்-ஹாஜ் ரிம்ஸான் ஹம்ஸா , அல்-ஹாஜ் அஷரூஸ் அனஸ் இனைப் பொருளாளர் அல்-ஹாஜ் ஸவாஹிர் ஸரூக் , உருப்பினர்களான அல்-ஹாஜ் முஸ்னி உவைஸ், அல்-ஹாஜ் தஹ்லான் மன்ஸூர் ஜாமிய்யதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீட , மருதானை முஹம்மத் அல்-பாஸி அரபுக் கல்லூரி மாணவர்கள் உலமாக்கள் முகத்த மீன்கள் முன்சிதீன்கள் , இஃவான்கள் மற்றும் அல்-ஹாஜ் அஸாம் பளீள் , சியான் முனவ்வர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதியொதுக்கீடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அனுர உட்பட எவருக்கும் தடுக்க முடியாது

### ஐ.ம.சக்தி அத்தனகலை அமைப்பாளர் சந்திரசோம சரணலால்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும்கட்சி சரிவுகளைச் சந்தித்து வரும் நிலையில் எதிர்க்கட்சிகள் வென்றெடுக்கும் சபைகளுக்கு நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட மாட்டாதென ஜனாதிபதியும் அமைச்சர்கள் சிலரும் தெரிவித்துள்ளனர்.

இதனை எந்த வகையிலும் ஏற்க முடியாதென அத்தனகலை தேர்தல் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் சந்திரசோம சரணலால் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் காரியாலயத்தை நேற்றிரவு கஹட்டோவிட்டவில் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கஹட்டோவிட்ட வட்டார வேட்பாளர் அரபாத்தின் வெற்றிக்கு சகலரும் கட்சி,நிற பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டு மென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, மக்களின் வரிப் பணத்திலேய உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன.

ஆளும் கட்சி அல்லது எதிர்க்-கட்சிகள் சபைகளை வெல்லும் பட்சத்தில் நிதியொதுக்கீடுகள், அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி அனுர அல்ல எவருக்கும் தடுக்க முடியாது.

தோல்வியின் பயத்தில் ஆளும் கட்சியினர் இவ்வாறு சொல்லும் பொய்களை நம்ப வேண்டாம்.

எந்த வித தயக்கமும் இன்றி 6 ஆம் திகதி காலையிலேயே சென்று தொலைபேசிக்கு வாக்களிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.






# வாசிப்பும் வயதெல்லையற்ற அதன் பரிமாணங்களும்

வாசிப்பு வாழ்நாள் நீடித்த செயற்பாடு என்பதற்கு அமைய அதற்கு வயது எல்லையோ காலம் இல்லையோ பால் ரீதியான வேறுபாடு கிடையாது. ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு துறைகளுக்கு ஏற்ற ஆர்வத்துக்கு அமைய வாசிப்பை ஆழமாகவும் அகலித்தும் விசாலிக்கச் செய்யலாம்.

இஸ்லாமிய வரலாற்றை பொறுத்தளவில் இறுதி தூதராக முஹம்மதை (ஸல்) அல்லாஹ் நபியாக தெரிவு செய்யும் போது அவருக்கு வயது நாற்பது. இறைவன் ஏவிய முதல் வசனம் "வாசிப்பீராக" அதற்கு நபியவர்களது பதில் எனக்கு வாசிக்க முடியாது என்பது தான்.

ஆனாலும் எழுத்தும் வாசிப்பும் வாழ்வும் படைத்த இறைவனும் பின்னிப்பிணைந்தாற் போல அதனையே முதல் ஐந்து வசனத்திலும் இறைவன் மீள மீள வலியுறுத்திக் கூறி அழுத்தமாகவே அதன் எல்லையற்ற செயற்பாட்டுக்கு தூண்டுதல் தருகின்றான்.

முஸ்லிம்கள் பங்கெடுத்த சத்தியத்திற்கான போராட்டத்தில் கூட சிறைபிடிக்கப்பட்டவர்கள் தமது விடுதலைக்காக மதீனத்து சிறுவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுப்பதுதான் நிபந்தனையாக விடப்பட்டது.

நாற்பது வயது கடந்தும் வாசிக்க வேண்டும். வாசிக்க முடியாவிட்டால் முயற்சி செய்து வாசிக்க வேண்டும்.

படைத்த உமது இரட்சகனின் பெயரை வைத்து வாசிப்பீராக என்பது இந்த உலகில் உயிர் வாழும் வரை வாசிப்பீராக என்று அர்த்தம் கொள்ளலாம். அதுதான் இன்று வேறு வார்த்தையில் வாழ்நாள் நீடித்த கல்வியாக பரிணாமம் பெற்றுள்ளது. life long education

இறுதித்தூதர் கொண்டு வந்த தூதின் முதல் கட்டளை வாசிப்பீராக என்பது தான். எனவே குழந்தைகளுக்கு முதலில் பழக்க வேண்டியதும் வாசிப்புதான். காரணம் இஸ்லாத்தில் தொழுகையை ஏவுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப வயதெல்லை 7. தொழுகையை மிகச் சரியாக கற்றுக்கொள்ள மூன்று வருடங்கள் அதற்கு பயிற்சி தர வேண்டும்.

ஆனால் வாசிப்பு பழக்கம் அதனை விடவும் முந்தியது. காரணம் சுமார் ஆறு வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுகின்றனர். எனவே பருவ வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அமைவான அளவில் வாசிப்பு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெருத்தளவில் சொல்லப்படக்கூடிய ஓர் உதாரணம் தான், தனது பிள்ளையை பாடசாலைக்குச் சேர்க்க வேண்டிய வயதெல்லையை அறிந்து கொள்வதற்காக உளவள ஆலோசகர் ஒருவரிடம் சென்ற தாயிடம் பிள்ளையின் வயதை வினவிய பொழுது ஆறு வயதெனக் கூற பிள்ளையின் ஏழு வருடங்களை வீணடித்து விட்டீர்கள் என்றதும் அதிர்ந்து போன தாய் பிள்ளையின் வயது ஆறு என்பதை மீண்டும் உறுதியாகக் கூற அந்த உளவள ஆலோசகரோ குழந்தை உங்கள் வயிற்றிலிருந்த ஒரு வருடத்தை பயனற்ற வகையில் வீணாக்கி விட்டீர்களே என்றார். இந்த ஒரு வருடம் அவருடைய ஆளுமை உருவாக்கத்தில் மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விட்டதாக சொன்னார்.

வாசிப்பு எப்போதும் வணக்கமாக அமைந்து விடுகிறது. அது நிதானத்தை நிம்மதியை தருகிறது. வாசிப்பால் நீண்ட காலம் கூட வாழ முடியும்.

எமது சமூகம் வாசிப்பை விட்டும் ஏன் தூரமாகி விலகி இருக்கின்றது இன்று வினாவை என்னை நோக்கி விடுத்தால் பிள்ளைகளை வாசிப்பதற்கு பழக்கவில்லை பயிற்சி கொடுக்கவில்லை வழமையாக்கிக் கொள்ளவில்லை என்பதுதான் விடையாக கிடைக்கும்.

## ஆறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லினாய்ஸைச் சேர்ந்த குற்றவாளிக்கு 53 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் நேற்று 02-05-2025 இந்த தீர்ப்பை அறிவித்தனர்.

ஒக்டோபர் 7 தாக்குதல்களைத் தொடர்ந்து தொடங்கிய காசா மீதான இஸ்ரேலின் போர் தொடங்கிய சில நாட்களுக்குப் பிறகு, 73 வயதான ஜோசப் சுபா, வாடி அல்ஃபாயூமியைக் கத்தியால் குத்தி, அவரது தாயார், ஹனான் ஷாஹீனை கடுமையாக காயப்படுத்தினார்.

"இன்றைய தீர்ப்பு தேவையான அளவிலான நீதியை வழங்குகிறது" என்று அமெரிக்க - இஸ்லாமிய உறவுகள் கவுன்சில் கூறியது. "வாடி ஒரு அப்பாவி குழந்தை. அவர் முஸ்லிம், பாலஸ்தீனியர் என்பதற்காக குறிவைக்கப்பட்டார்."

அக்டோபர் 7 க்குப் பிறகு அமெரிக்காவில் நடந்த முதல் மற்றும் மிகவும் கொடூரமான வெறுப்பு குற்றங்களில் ஒன்றாக இந்தத் தாக்குதலை வழக்குரைஞர்கள் விவரித்தனர்.

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று கருத்துரைத்த அவர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான முன்னைய அரசாங்கம், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் புள்ளியாகப் பயன்படுத்துவதற்காக, 2033 வரை நீடிப்பு பெறும் சாத்தியம் இருந்தபோதிலும், 2028 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்தும் செயல்முறையை ஆரம்பிக்க ஒப்புக்கொண்டதாக, சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

ஆனால் அது நாட்டிற்கு அல்லது அதன் மக்களுக்கு எந்த நன்மையையும் கொண்டு வரவில்லை என்று கூறினார்.

தற்போதைய அரசாங்கம் அத்துடன், அது விடயமாக சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தவறியதற்காக தற்போதைய நிர்வாகத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் விமர்சித்தார்.

எனவே, 2028 ஆம் ஆண்டுக்குள் கடன் திருப்பிச் செலுத்துதலை ஆரம்பிக்க முடியாவிட்டால், நாடு மற்றொரு மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டியிருக்கும் என்று சஜித் வலியுறுத்தினார்.

எனவே, கடனை திருப்பிச் செலுத்த ஆரம்பிக்கும் போது இலங்கை ஆபத்தில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் அதன் பதவிக்காலம் முடிவதற்குள் தோல்வியடைந்தால், ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொள்வாரா என்ற கேள்விக்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொது மக்கள் ஆணையின்றி ஜனாதிபதி பதவியை ஏற்கப் போவதில்லை என்று வலியுறுத்தினார்.

## சிறிது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட வேண்டாம் என்று தொழிற்சங்கங்களை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார், மேலும் அவர்கள் தங்கள் பழைய அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒரு அரசியல் சக்தியாக, தேசிய மக்கள் கட்சி, அரசியலமைப்பு, வர்த்தமானிகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் தங்களுக்குக் கிடைத்த சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை விட்டுக்கொடுத்துள்ளதாக ஜனாதிபதி மே தின உரையில் கூறினார்.

"தொழிற்சங்கங்கள் தங்கள் பழைய மனப்பான்மைகளைக் கைவிட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அற்ப விஷயங்களுக்காக போராட வேண்டாம். ஒரு அரசியல் சக்தியாக, அரசியலமைப்பு, வர்த்தமானிகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் எங்களுக்குக் கிடைத்த சலுகைகளை நாங்கள் விட்டுக்கொடுத்துள்ளோம்.

எங்களுக்கு சிறிது நேரம் கொடுங்கள். நீங்கள் தெருவில் இறங்கி எங்களை கட்டாயப்படுத்த வேண்டியதில்லை. உங்கள் இதயத்துடிப்பையும் அபிலாஷைகளையும் உணரும் ஒரு அரசியல் சக்தி நாங்கள்," என்று அவர் கூறினார்.







# பேருவளையின் இரண்டு சபைகளையும் முன்மாதிரி மிக்க சபைகளாக மாற்றியமைப்போம்

## தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் அருஸ் எம் அஸாத்

பேருவளை பி.எம் முக்தார்

**பேருவளை தேர்தல் தொகுதியை உள்ளடக்கிய நகர சபை,பிரதேச சபை ஆகிய இரண்டு சபைகளுக்கும் அர்ப்பணிப்புடன் சேவை செய்யக் கூடிய மிகவும் திறமை வாய்ந்த இளம் தலைமுறையினரைக் கொண்ட சிறந்த அணியொன்றையே எனது வழிகாட்டலுடன் அமர்த்தியுள்ளேன் என்று தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினரும் கடந்த பாராளுமன்ற வேட்பாளருமான அருஸ் எம்.அஸாத் கூறினார். உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து தே.ம.ச.யின் மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினர் என்ற வகையில் அஷ்ரூஸிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவருடன் மேற்கொண்ட நேர்காணல் வருமாறு:**

**வினா: மிகவும் சிறந்த அணியொன்றை பேருவளை நகர சபைக்கும் பிரதேச சபைக்கும் நிறுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள் இரண்டு மன்றங்களையும் உங்கள் அணிகள் வென்றெடுக்கும் வாய்ப்புகள் உள்ளனவா?**

**அரூஸ்:** ஆம், நிச்சயம் எமது அணிகள் வெல்லும்.

**வினா: எப்படி கூறுகிறீர்கள்?**

அரூஸ்: ஆளும் தரப்பிடமே உள்ளூராட்சி மன்றங்கள் சென்றடைவது வழமை. அதிலும் ஜனாதிபதித் தேர்தலில் எமது என்.பி.பி.அமோக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. அதனைத் தொடர்ந்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் அதனை விடவும் பன்மடங்கு அதிகூடிய வாக்குகள் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்கள் ஆணையை பெற்று வரலாறு படைத்ததை பலரும் அறிவார்கள். கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் எமது கட்சி பேருவளை தொகுதியை வென்றெடுத்தமை மற்றொரு சிறப்பம்சமாகும். எமது கட்சி நாட்டில் மகத்தான மாற்றங்களை முன்னெடுத்து அரசியல் பயணத்தில் வீறுநடை பயின்று கொண்டிருக்கிறது. அதனால் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலிலும் எமது பேருவளை மட்டுமல்லாது நாட்டின் சகல மன்றங்களையும் எமது என்.பி.பி. கட்சியே கைப்பற்றும் என்று உறுதியாகக் கூற முடியும்.

**வினா: என்.பி.பி. சரிவை நோக்கி வீழ்ந்து கொண்டிருப்பதாக தற்போது தேர்தல் பிரச்சாரம் மேடைகளில் எதிர் தரப்பினர் கூறி வருகிறார்களே?**

**அரூஸ்:** அது வெறும் முழக்கம் தான் நாட்டில் ஊழல் மோசடிகள் அற்ற முறையில் மிக மிக சிக்கன-மான செலவுகளுடன் அரசியல் பயணத்தை எமது அரசு கடைப-பிடித்துக் கொண்டிருப்பதால் விதைக்கப் பட்ட நல்லாட்சிக்கான விதையை எதிர்த்தரப்பினர் முளையிலேயே கிள்ளிவிடச் செய்யும் போலி பிரசாரங்களுக்கு இந்த தேர்தலிலும் எமது மக்கள் சரியா பாடம் புகட்டுவார்கள். அரசியலில் படுதோல்வியடைந்த வங்குரோத்து அரசியல் வாதிகளுக்கு மேடையில் முழங்க ஒன்றுமில்லை அதனால் தான் எமது அரசு சரிந்து கொண்டிருப்பதாக புளுகு மூடை அவிழ்த்து கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**வினா: ஜனாதிபதி பாராளுமன்ற தேர்தல் மேடைகளில் கூறிய வாக்குறுதிகள் எதனையும் இந்த அரசும் ஜனாதிபதியும் இதுவரை நிறைவேற்றவில்லை என்று குரல் எழுப்பப்படுகிறதே?**

**அரூஸ்:** பிறந்த குழந்தையை ஒன்று நடப்பதற்கு குறைந்தது ஒரு வருடமாவது எடுக்கும் அல்லவா எமது அரசு குழந்தையும் தற்போது நான்கு ஐந்து மாதத்திலேயே பயணித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் வாக்குறுதிகளில் பலவற்றில் இப்போதே அத்தி வாரமிட்டுள்ளது. பொறுத்திருந்து பாருங்கள் நிச்சயம் அவை அனைத்தும் நிறைவேற்றி வைக்கும் காலம் வெகு தூரத்தில் இருக்காது.
76 வருடங்களாக மாறி மாறி வந்த ஆட்சியாளர்களால் நாடு அதல பாதாளத்திற்கே தள்ளப்பட்டு அழிவின் விளிம்பில் இருந்த போதே ஆட்சிப் பொறுப்பு எமது என்.பி.பி.யின் கைக்கு கிடைத்தது. எனவே அடுத்த எடுப்பிலேயே சீராக்கி விட இது சிறுகாடல்ல இரண்டு கோடிக்கு மேல் மக்கள் வாழும் நாடல்லவா? வாக்குறுத்துக் காரர்களின் வாக்கற்ற வார்த்தைகளை எமது புத்திஜீவி மக்கள் இனியும் ஏற்கமாட்டார்கள்.

**வினா: தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள் அனுபவ மற்றவர்கள். சிறு பிள்ளைகள் செய்த வேளாண்மை வீடு போய் சேராது என்றெல்லாம் கூறப்படுகிறதே?**

**அரூஸ்:** 76 வருடங்களாக எதிரிகள் குறிப்பிடும் அனுபவசாலிகளால் தானே நாடு குட்டிசுவராக்கப்பட்டது. பொருளாதாரத்தில் வாக்குரோத்து நிலைக்கே நாடு தள்ளப்பட்டுள்ளதை உலகமே கண்டு வெள்ளி நகையாடியதல்லவா? இப்போது அனுபவமில்லா விட்டாலும் நல்ல அறிவுள்ள புத்தி ஜீவிகளாலேயே இன்று எமது நாட்டு அரசியல் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**வினா: பேருவளையில் இரண்டு சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் பட்சத்தில் உங்களால் முன்னெடுக்க உள்ள வேலை திட்டங்கள் எவை?**

**அரூஸ்** 7 தசாப்தங்களுக்கு மேலாக நாடு நாசத்தில் தள்ளப்பட்டது போன்றே மாகாண சபைகள் நகராட்சி மன்றங்கள் யாவும் ஊழல் மோசடிகளின் உறைவிடங்களாக் கப்பட்டே வாழ்ந்துள்ளமையே வரலாறாகும்.
நாட்டை சீராக்கும் “கிளீன் ஸ்ரீலங்கா” எனது வேலை திட்டத்தில் முழு நாடுமே தூய்மைப்படுத்தப்படத்தான் போகிறது அந்த வகையில் எமது பேருவளையின் இரண்டு சபைகளும் முன்மாதிரிமிக்க நகர பிரதேச சபைகளாக மாற்றியமைக்கும் பணிகளே எமது முதல் கட்ட செயற்திட்டமாகும்.
முன்னர் பதவிகளில் இருந்தவர்களால் முன்னெடுக்கப் பட்ட செயல்திட்டங்களில் நிறைய குறைபாடுகள் உள்ளன அவர்களின் சுயநலன்களே முதன்மைப் படுத்தப்பட்டன. அதனால் எமது நகரமும் பிரதேச சபையும் முறையான அபிவிருத்தியடையவில்லை இந்த விடயத்தில் நாம் கண்ணும் கருத்துமாக இருந்து கருமமாற்றுவோம் இவற்றை நான் சீரும் சிறப்புமாக வழிநடத்துவேன் இதற்கு எமது ஜனாதிபதியும் பாராளுமன்ற மும் பக்க துணையாக இருந்து எமக்கு ஆலோசனை தந்து கொண்டே இருக்கும் இப்படிப்பட்ட கட்டுக் கோட்பொன்று எமக்குள் இருக்கவே செய்கிறது.
எமது நகர சபையையும் போதிய வருமானம் தரக்கூடிய நிறுவனமாகும். எனவே எனக்கு கிடைக்கும் வரும்படியைக் கொண்டே எமது பிரதேசத்துக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும். அரசியல்வாதிகளிடம் ஊழல் மோசடிகள் இல்லை என்றால் நகரமும் நாடும் உருப்படியான முறையில் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.



**வினா: தேசிய மக்கள் சக்தி பரிபாலனத்தால் எமது பேருவளை சுவர்க்கபுரியாக உருவெடுக்க போகிறது என்கிறீர்களா?**

**அரூஸ்:** ஆம் அதில் எந்த வித சந்தேகமும் இல்லை வரலாற்று காலத்திற்கு முன்பிருந்தே பேருவளை பேரும் புகழும் பெற்று விளங்கிய பூமியாகும் முஸ்லிம்களின் முதலாவது குடியேற்றம் நிகழ்ந்த பெருமையும் எனது பிரதேசத்திற்கு உண்டு. கறுவா ஏற்றுமதி பிரதேசம் போன்றே அன்றும் இன்றும் இரத்தினங்கள் வர்த்தகத்திற்கு சர்வதேசம் வரை பேசப்படும் ஊர் சினன்கோட்டை என்பதை பலரும் அறிவார்கள். எமது ‘பத்த’ சர்வதேச சந்தையில் அன்றாடம் முழு உலகிலிருந்தும் பெயர் பெற்றவர்கள் வந்து போகும் இடமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்த நகருக்கு எமது சேவைகள் முறையாக கிடைக்கும்போது இனி சுவர்க்கபுரியாக மிளிரும் என்பதில் என்ன சந்தேகம்? எனவே எமது மக்கள் கடந்த இரண்டு தேர்தல்களையும் விட இந்த ஊராட்சி மன்ற தேர்தலில் மிகவும் கூடிய வாக்குகளை எமது மாளிமா - திசை காட்டி சின்னத்துக்கு அளித்து புதியதொரு யுகம் படைக்க உதவும்படி மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



# அக்கரகொட வட்டாரத்தில் களமிறங்கியுள்ள

# மு.க. போராளி ஷியான் முனவ்வர்

பேருவளை பீ.எம் முக்தார்

**2025 பேருவளை நகர சபைக்கான தேர்தலில் சீனன் கோட்டை அக்கர கொட வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீவிர போராழியாக ஷியான் முனவ்வர் இந்த முறையும் களம் இறங்கியுள்ளார்.**

கடந்த முறை தேர்தலிலும் வட்டார மக்களின் வேண்டுகோளுக்காக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவர் கடமை, கன்னியத்தொடு தன்னாலான சேவைகள் புரிந்து துணிவோடு இந்த தேர்தலில் போட்டியிடுகிறார். இவர் சீனன் கோட்டை அக்கர கொடையைச் சேர்ந்த இரத்தினக் கல் வர்த்தகரான காசிம் லெப்பை அலி மரிக்கார் பாத்திமா சுஹறா தம்பதியின் புதல்வராவார். அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கற்று பின்னர் இவரும் தந்தை வழியில் மாணிக்க வியாபாரத்தில் கால் பதித்தார். படிக்கும் காலத்திலேயே விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டியதோடு பொது நல பணிகளிலும் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். இப் பண்புகளே இவரை அரசியலிலும் ஈடுபட வழிகாட்டியாகவும் இவர் குறிப்பிடுகிறார். அத்துடன் தம் பணிகளால் கவரப்பட்ட மக்களே கடந்த முறை தேர்தலில் தன்னை அக்கர கொட வட்டாரத்தில் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டத ற்கமைய போட்டியிட்டு வெற்றி பெற்றதாகவும் கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகையில் பணிகள் குறித்து வினவிய போது அவர் கூறியதாவது 2013ஆம் ஆண்டு ஞானசாரவின் இனவாத பிரச்சாரத்தின் எதிரொளியாக அளுத்கமயில் தலைதூ க்கிய முஸ்லிமாகளுக்கு எதிரான இன கலவரத்தால் எம்மை சூழவுள்ள பல முஸ்லிம் பிரதேசங்கள் வெகுவாக பாதிப்புக்குள்ளாக்கின. இந்த சந்தர்ப்பங்களில் இளம் அரசியல் வாதியாக நான் இருந்தேன். எமது சமூகத்திற்கு எதிராக நடந்தேறிய அநீதி அக்கிரமங்கள் குறித்து எனது அரசியல் தலைமை பீடத்திற்கு முன் கொண்டு சென்றேன்.

எனது அயராத அரசியல் முன்னோடி அஸ்லம் ஹாஜியாரின் வழிகாட்டலில் கட்சி தலைவர் ரவுப் ஹகீமின் கவனத்திற்கு விரைந்து கவனத்திற்கு கொண்டு சென்றேன். உடனே அவர் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார்.

நான் அவரை பாதிக்கப்பட்ட கடைகள், வீடுகளுக்கெல்லாம் அவரை கூட்டிச் சென்று நேரில் பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகளில் இறங்கி வழிசமைத்து கொடுத்தேன். இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களும் பின்னர் இழப்பீடுகளும் பெற உதவியுள்ளேன்.

2020 கொரோனா தொற்றினால் எமது சீனன் கோட்டை உள்ளிட்ட எமது பல பகுதிகள் முடக்கப்பட்டு எமது மக்கள் வீடுகளுக்குள்ளே வெளியே வர முடியாது முடங்கி கிடந்தனர். அப்போதும் நான் எனது சகாக்கள் சிலருடன் சம்மந்தப்பட்ட வீடுகளுக்கு சென்று அன்றாட உணவுகள், உலர் உணவுகள், பொருட்கள் போன்ற அத்தியாவசிய அடிப்படை தேவைகளை கையளித்து என்னாலான பங்களிப்புகளை வழங்கியுள்ளேன்.

பாதுகாப்பு துறை, சுகாதார அதிகாரிகளின் அனுமதியை பெற்று பல சிரமங்களை எதிர் கொண்டு இரவு பகலாக பணிகளில் ஈடுபட்டதை சம்பந்தப்பட்ட மக்கள் நன்கறிவார்கள். இத்தகைய பணிகளால் மக்கள் மனங்களில் நன்கு இடம்பெற்றுள்ளேன். இவை எனது தேர்தல் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தன எனலாம். கடந்த தேர்தலில் உறுப்புரிமை பெற்றதன் பின்னர் எனது பொது நலப்பணிகள் மேலும் பல மடங்காகின. சேதமடைந்த பல ஊர்கள் எனது முயற்சியால் செப்பனிட்டுக் கொடுக்கப்பட்டன. உடைந்த வடிகால்கள் சீர் செய்து கொடுக்கப்பட்டன.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது கம்பெரலிய உள்ளிட்ட பலதரப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் பட்ட போது எமது பேருவளை தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் இப்திகார் ஜமீல் அவர்களுடன் இணைந்து குறிப்பிட்ட சேவைகளை எமது சமூகத்திற்கும், எமது பிரதேசத்திற்கும் கிடைக்கச் செய்வதில் பங்களிப்பு செய்துள்ளேன். மேலும் எமது எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனிப்பட்ட ரீதியில் பள்ளிகள், பாடசாலைகள், சமயத்தலங்கள். அஹதியாக்களுக்கு வழங்கும் உதவிகளையும் பெற்று எமது மத்ரஸ ாக்கள், அஹதியாக்களுக்குகிடைக்கவும் பங்களிப்பு செய்துள்ளேன்.

சமூக பணிகளுக்கு புறம்பாக சமூக நன்மை கருதி மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் உண்டா என வினவிய போது கூறியதாவது..

கொவிட் 19 போது மனிதாபிமானம் வெட்கி தலை குனியும் முஸ்லிம் ஜனாஸ ாக்கள் எறிக்கப்படுவதை கண்டித்து எமது நகர சபை கட்டிடத்தின் முன்பும், தலைநகர் உள்ளிட்ட பிற இடங்களிலும் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்கள் பலவற்றிலும் கலந்து கொண்டு எங்கள் கன்டனத்தை வெளிப்படுத்தி உள்ளேன். இவற்றில் எமது தேசிய தலைவர் ரவுப் ஹகீமுடன் இணைந்தும் பங்காளித்து உள்ளேன். ஊரில் டெங்கு ஒழிப்பு விடயத்திலும் மக்களுக்கு தெளிவூட்டல் விடயங்கள் அரசு மட்டத்தில் இடம்பெறும் போதும் சுகாதார பரிசோதகர்களுடன் கை கோர்த்து எமது சமூகத்திற்காக ஒத்துழைப்பு வழங்கியுள்ளேன்.

மேலும் காஸா பலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் அடிக்கடி நடாத்தும் அடாவடித் தனங்களை கண்டித்து இடம் பெறும் ஆர்ப்பாட்டங்களிலும் முன்நின்று எதிர்ப்பினை வெளிக்காட்டி வந்துள்ளேன்.

குப்பை பிரச்சினை சீனன் கோட்டையை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றன. எமது அணி நகர சபையைக் கைப்பற்றும் பட்சத்தில் இந்த அவலத்தை நீடிக்க விடாத மிக குறுகிய காலத்திலேயே குப்பைகள் குவிந்து தேங்கிக் கிடக்க இடம் வைக்காது சிறந்த முகாமைத்துவ முறையொன்றை எமது இப்திகார் ஜமீல் அவர்கள் கையாள இருக்கிறார் என்பதையும் அறிய தருகிறேன்

கடந்த காலத்தில் நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் பயாகலையில் குப்பைகளை மீள் சுழற்சி செய்து முகாமைத்துவ படுத்தல் திட்டமொன்றை எமது அமைப்பாளர் இப்திகார் ஜமீல் அவர்கள் மேற்கொள்ள முயற்சித்த போது ஜே.வி.பி. அதாவது இன்றைய என்.பி.பி. ஆட்சியாளர்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு அந்த திட்டத்தை தவிடுபொடியாக்கினார்கள். இவர்கள் தான் இப்படிப்பட்ட கடுத்தனங்களை செய்து நாட்டை குழப்பியடிக்கிறார்கள்.

கடந்த தேர்தலில் முஸ்லிம்கள் பலர் எம். பி.பி யை ஆதரித்து அரியாசனம் ஏறச் செய்தனர். வென்ற பின்னர் முஸ்லிம்களை மாறு கண் கொண்டே நோக்குகின்றனர். பொய் புரட்டை கட்டவிழ்க்கின்றனர். குறிப்பாக எமது ருஷ்தி ஸ்டிக்கர் ஒட்டிய விடயத்தை பெறிய பயங்கரவாத குற்றமாக காட்டி அவரை படாத பாடுபட செய்தனர். அவர் விடயத்தில் ஜனாதிபதி ஒன்றைச் சொல்ல பாதுகாப்பு அமைச்சு வேறு ஒன்றை சொல்லி திருகுதாளங்களை காட்டுகின்றனர். பலத்த எதிர்ப்புக்கு அஞ்சி அவரை விடுவித்த போதும் கடும் நிபந்தனைகளை விடுவித்துள்ளார்கள். அச் செயல் பாரிய பயங்கர வாதம் என்பதை அவர்கள் இன்னும் காட்டவே எத்தனிக்கிறார்கள். இத் தேர்தலின் பின் இன்னும் எம்மை வாட்டி வதைக்க பார்க்கிறார்களோ ஏனெனில் இஸ்ரேலையும், இந்திய மோடியையும் திருப்திப் படுத்தவே முஸ்லிம்களை



பகடைக் காயாக பார்க்கிறார்கள். எனவே இந்த தேர்தலிலாவது இவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும்.

உங்களிடம் வேறு குறிப்பிடத்தக்க பணிகள் உள்ளனவா? என்று என மேலும் வினவியதற்கு அவர் கூறியதாவது..

சென்ற தடவை நான் பேருவளை நகர சபை அங்கத்தவராக இருந்த போது எதிர்க் கட்சி அணியிலேயே தான் இருந்தேன். அப்போது எனது முயற்சி பணிகளை முன்னெடுத்துள்ளேன். அத்துடன் நகர சபையால் எனக்கென வழங்கப்படும் மாதாந்த கொடுப்பணவுகள் சலுகை நிதிகள் எதனையும் நான் பெறாது இப் பகுதி இப் பகுதி வரிய குடும்பங்கள் மற்றும் வசதி குறைந்த பிள்ளைகளின் கல்வி, மத்ரஸாக்கான கற்றல் உபகரணங்கள், இதர செலவுகளுக்காக கொடுத்துதவி வந்துள்ளேன். எதிர் வரும் காலங்களில் நான் வெற்றி பெறும் போதும் இவ்வாறே நிதியை ஏழைகளுக்கு வழங்குவேன் என கூறிக் கொள்கிறேன்.

மேலும் எனது வீட்டுக் கதவு எனது வட்டார மக்களுக்காக இருபத்து நான்கு மணிநேரமும் திறந்தே வைத்துள்ளேன். என்னாலான பணிகள், இதர பணிகள் இன, மத, ஏழை , செல்வந்தன், படித்த, பரமர் என்ற பாகுபாடுகள் இல்லாமல் தொடரும் என்று உறுதியளிக்கிறேன். இது தேர்தல் கால வாக்குறுதி அல்ல. எனது பண்பு மக்களுக்கு நன்கு தெரியும். நகர சபையைத் தவிர வேறு அமைப்புகளிலும் பதவிகள் வைத்துள்ளீர்களா என்று கேட்கப்பட்டதற்கு பதிலளிக்கையில், நான் சமாதான நீதவானாக இருந்து மக்களுக்கு தேவையான பத்திரங்கள், கட்டிடங்களுக்கான எனது கையொப்பம் அவசியப்படும் இடங்களில் வைத்து அவர்களது தேவைகள் நிறைவேற உதவியுள்ளேன். நான் கற்ற அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்திலும் அங்கம் வகித்து பாடசாலையின் கல்வி மற்றும் வளர்ச்சியிலும் பங்களித்து வருகிறேன். அதே போன்று இக்ரஃ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாழர் பதவியில் அமர்ந்து அதன் வளர்ச்சி மேம் பாடுகளுக்கும் உதவி வருகிறேன். இவ்வாறு பல தரப்பட்ட வழிகளிலும் எமது தலைமை கட்சி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக எமது நகர சபைக்குரிய பணிகள் நடைபெற்றுக் கொண்டு தான் வருகின்றன. இவை தொடரவும், எமது பிரதேசம் மீள் எழுச்சி பெறவும் நாம் போட்டியிடும் தொலைபேசி சின்னத்திற்கு வாக்களிக்க தவற வேண்டாம். என எனது வட்டார மக்களிடமும் , நகர சபையின் இதர வட்டார விக்காள பெறு மக்களிடமும் மிகவும் வினையமாக கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி அமைப்பாளர் இப்திகார் ஜமீல் அவர்களின் வழிகாட்டல் ஆலோசனைகளுடன் நன்கு அனுபவமும் தகைமையும் வாய்ந்த பழுத்த அரசியல் தலைவர்களை உள்ளடக்கிய அணி ஒன்றை எமது நகர சபையிலும், பிரதேச சபையிலும் அமர்த்தப்பட்டுள்ளன. எனவே கடந்த பாராளுமன்ற தேர்தலில் கன்றுக் குட்டியை நம்பியும் என். பி. பி. யின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாற்றம் அழித்தது போல் இந்த குட்டி தேர்தலிலும் ஏமாற வேண்டாம்.



# தலைநகருக்கு நிகரான உயர் நகராக களுத்துறை நகரத்தை மாற்றியமைப்பேன்

## வேட்பாளர் ஆமிர் நஸீர்

பேருவளை பீ. எம். முக்தார்

களுத்துறை மாநகர சபைக்கான தேர்தலில் இந்த முறை சுமார் நான்கு தசாப்தங்களாக களுத்துறை மாநகருக்கு பணியாற்றிய அரசியல் ஆளுமை நஸீர் ஹாஜியாரின் துடிப்பும் துணிவுமுள்ள வாரிசு ஆமிர் நஸீர் தலைமையிலான பலமான குழுவொன்று தேர்தலில் குதித்துள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக இம் மாநகர சபையின் 19 வட்டாரங்களிலும் தனி மரமாக நின்று போட்டியிடுகிறது.

களுத்துறை பிரதேசத்திற்கு மட்டுமன்றி முழு களுத்துறை மாவட்டத்திற்கும் தன்னாலான சேவைகளை தொடர்ந்து கொண்டிருக்கின்ற மூகத்தின் சிரேஷ்ட அரசியல் ஆளுமை முகம்மது நஸீர் உம்மு ஆயிஷா தம்பதியின் சிரேஷ்ட புதல்வன் ஆமிர் 1979 மார்ச் 12ஆம் திகதி பிறந்தார்.

களுத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வியை தொடர்ந்து தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்றவர். அதனை தொடர்ந்து களுத்துறை வித்தியாலயத்தில் தரம் 6 முதல் உயர்தரம் வரை கற்று

இரத்தினக் கல் வர்த்தகத்தில் கால் பதித்தார். சின்னஞ் சிறு பிராயத்திலேயே அரசியல் பாசறையில் வளர்ந்த இவர் அரசியலிலும் சமூக நல பணிகளிலும் ஈடுபாடு காட்டியுள்ளார். இதனால் இத் துறையில் நன்கு அனுபவங்களை பெற்று 2000ஆம் ஆண்டுகளிலே தன் வர்த்தக துறையோடு அரசியலிலும் கால் பதிக்க ஆரம்பித்தார்.

இதன் முதற்கட்டமாக 2002ஆம் ஆண்டு களுத்துறை நகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிட்டு நகர சபை உறுப்பினராக பயணிக்க ஆரம்பித்தார். அந்த பயணத்தில் பல தடைக்கற்களோடு பல மைல் கற்களையும் தாண்டி இன்று 2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக தனித்து நின்று தனது தலைமையிலான சிறப்பு அணி ஒன்றை களமிறங்கியுள்ளார்.

இந்நிலையில் இவரது அரசியல், சமூக பணி குறித்து வினவிய போது அவர் வெளியிட்ட அனுபவ கருத்துக்கள் வருமாறு..

மர்ஹூம் எம்.எச்.எப். அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்து முஸ்லிம் சமூகத்திற்கென தனித்துவ கட்சி ஒன்றின் தேவையை சமூகமயப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது இந்திய அரசின் துணையோடு மாநகர சபை அறிமுகப்படுத்தப்பட்டு 1988/89 களில் மாகாண சபை தேர்தல் நடை பெற்று அதில் களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முறையாக போட்டியிட்டு இரண்டு ஆசனங்களை கைப்பற்றிக் கொண்டது. அதில் எனது தந்தை நஸீர் ஹாஜியாரும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அப்போது எனது தந்தையால் முன்னெடுக்கப் பட்ட அரசியல், சமூக பணிகளில் பத்து வயது தாண்டிய சிறுவனாக இருந்து தந்தையோடு பணியாற்றி வந்தேன்.

எனக்கு இருபத்து மூன்று வயதாகும் போது 2002இல் களுத்துறை நகர சபை தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பாக போட்டியிட்டேன். விருப்பு வாக்களில் மூன்றாம் இடம் பெற்று அங்கத்தவரானேன். இவ்வாறு இளம் வயதில் மாவட்டத்தில் பிரகாசிக்க ஆரம்பித்தேன். 2006ஆம் ஆண்டு களுத்துறை நகர சபை தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மாவட்ட அமைப்பாளர் ரோகித அபயகுணவர்தன வினால் களுத்துறை நகர சபைக்கான தேர்தலில் நான் அமர்த்தப்பட்டேன். அதில் 2997 விருப்பு வாக்குகளை பெற்று இரண்டாம் இடம் பெற்றேன். களுத்துறை நகர சபை வரலாற்றில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் அதுவும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சார்பாக அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்று வென்றமை வரலாற்று பதிவாகியது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற களுத்துறை நகர சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் லக்ஷ்மன் விஜயமானனின் அழைப்பின் பெயரில் அக் கட்சி சார்பாக களமிறங்கி வெற்றி பெற்றேன். அப்போது உப தவிசாளர் பதவி என்னை வந்தடைந்தது.

2018ஆம் ஆண்டு அதே ஐக்கிய தேசிய கட்சி சார்பாக நகர சபை தேர்தலில் நின்று நகர சபையை வென்றெடுத்த போது நான் தவிசாளராக அமர்த்தப்பட்டேன். இவ்வாறு அரசியலில் படிப்படியாக பல படிகள் ஏறி வந்த நிலையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சகல மக்களுக்குமான சேவைகளை செய்து வந்துள்ளேன்.

இதனாலேயே மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் என்னை நாடி வந்துள்ளது. அடுத்து 24 மணிநேரமும் மக்கள் பணிக்காக அர்ப்பணிப்பு செய்து வந்துள்ளேன். எனது தொலைபேசியும் எப்போதும் எனது மனது போல் திறந்தே இருக்கும். வரும் அழைப்புக்களுக்கு எல்லாம் பதில் கொடுத்து மக்கள் தேவைகளை நிறைவேற்றியே வந்துள்ளேன்.

**வினா : முஸ்லிம் ஜனாஸாக்களை விரைவாக விடுவித்து விரைவாக நல்லடக்கம் செய்வ-தில் உங்களது பங்களிப்பு குறித்து களுத்துறை மாவட்டம் வரையிலும் பேசப் படுகிறது..?**

**அமீர் :** ஆம் எனது தந்தை வழியே என்னை இதில் ஈடுபட தூண்டியதென்றே கூற வேண்டும். அரசாங்க வைத்திய சாலையில் இயற்கை யாகவோ அல்லது விபத்தாகவோ/ இதர காரணங்களினால் சம்பவிக்கும் முஸ்லிம் ஜனாஸ ாக்களை அவசரமாக விடுவிப்பதில் எனது சமூகத்தினர் பலவாறான இடர் பாடுகளை எதிர் நோக்குகின்றனர். சட்ட பூர்வமாக ஜனாஸாக்களை விடுவிக்கும் முறை கூட பலருக்கு தெரிவதில்லை.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கூட பலரும்



எம்மையே நாடுகின்றனர்.

மரணம் தொடர்பாக எனக்கு தகவல் கிடைத்த உடனே நான் உரிய இடத்திற்கு துரிதமாக செல்வேன் உடனே செயல் இறங்குவேன். தேவைப்படும் பட்சத்தில் திடீர் மரண விசாரணை மற்றும் டாக்டர் உள்ளிட்ட எந்தெந்த அதிகாரிகள் அவசியப்படுகிறார்களோ அவர்கள் இல்லாத நிலையில் எனது வாகனத்திலே சென்று அவசியப்படுவோரை அழைத்து வந்து மிகவும் அவசரமாக காரியத்தை சாதித்து ஜனாஸாவை விடுவித்து கொடுப்பேன்.

எந்தவொரு அரசியல் வாதியும் என்னைப் போல் செயற்பட மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

**வினா : இயற்கை அனர்த்தங்களின் போது பங்காற்றிய அனுபவங்கள் உள்ளனவா?**

**அமீர் :** 2004ஆம் ஆண்டு சுனாமி பேரலையால் களுத்துறை மாவட்டத்திலும் பல ஜனாஸாக்கள் சம்பவித்தன. அவற்றை நானும் இனைந்து மீட்டிக் கொடுத்ததோடு நல்லடக்கம் செய்யும் வரையிலும் பங்களிப்பு செய்துள்ளேன். கடல் நீர் ஆற்று வழியாக கரையோர பகுதியை ஆக்கிரமித்தது. இதனால் கரையோர பகுதி மக்கள் குடியிருப்புகள் சேதமாகின அம் மக்களுக்காக கூடுதலான பங்களிப்பு செய்துள்ளேன்.

எமது அயல் ஊர்களில் அடிக்கடி இடம்பெறும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரண உதவிகள் எடுத்துச் சென்று மனிதாபிமான பணிகளிலும் ஈடுபடுவதும் உண்டு.

**வினா : அப்படியென்றால் அளுத்கம கலவரத்தின் போதும் உங்கள் பங்களிப்பு இருந்திருக்குமே?**

அமீர் : ஆம் ,2013ஆம் ஆண்டு ஞானஸார தேரரின் பிரச்சார தூண்டுதலால் அளுத்கம மற்றும் அதனைச் சூழ உள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், வீடுகள், உடைமைகள் உடைந்தும் தீயிட்டும் நாசமாக்கப்பட்டன. உயிர்களும் பலியாகின. அப்போது நான் களுத்துறை நகர சபை உப தலைவராக இருந்தேன். உடனே எமது தீயணைப்பு படையை அனுப்பி வைத்தேன். அப்போது கலவரம் மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது.

நான் எனது உயிரை துச்சமாக வைத்து நாகொட வைத்தியசாலைக்கு சென்று கலவரத்தின் போது பலியான இரண்டு ஜனாஸாக்கள் விடயமாக என் பங்களிப்பை செய்து விட்டு எனது வாகனத்துடன் ஜனாஸா வாகனமும் வந்து கொண்டு இருந்த போது அளுத்கமயில் வைத்து கலகக்காரர்களால் இரு வாகனங்களும் தாக்கப்பட்டன. மயிரிழையில் நாம் உயிர்தப்பினோம்.

யாரும் அனுக முடியாத அந்த சந்தர்ப்பத்தில் நாம் எனது சமூகத்துக்காக உயிரை பணயம் வைத்து துணிச்சலுடன் செயல்பட்டேன்.

**வினா : இது போன்று துணிச்சலாக செயற்பட்ட வேறு சந்தர்ப்பங்கள் உள்ளனவா?**

**அமீர் :** 1994இல் களுத்துறை கலீல் பிளேஸ் விளையாட்டு அரங்கில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற சிறு தகராறு இனக் கலவரமாக உறு எடுத்து உச்ச கட்டத்தில் பொலிசார் துப்பாக்கி பிரயோகம் நடத்தினர். ஆப்போது நான்கு பேர் பலியாகி ஆறு பேர் காயமடைந்தனர். அப்போது நான் எனது தந்தையோடு குழப்பம் நடந்த இடத்திற்குச் சென்று கலவரம் தொடர்ந்து முற்றுப்புள்ளி வைத்தேன். இவ்வாறு பணிகளை செய்து கலவரம் தொடராது முற்றுப் புள்ளி வைத்தேன்.

இவ்வாறு உயிரை துச்சமாக வைத்து தொண்டாற்றிய மற்றொரு சம்பவம் தான் 2020 கொரோனா காலத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை குறிப்பிடலாம். களுத்துறை மரிக்கார் வீதி முடக்கப்பட்ட போது பிறரால் அங்கு நுழைய முடியாத நிலையில் எமது மக்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வோடு உலருணவு பொருட்களை எடுத்து சென்று வினயோகித்த தோடு நோயாளிகளுக்கு தேயான மருந்து ஒதுதாசைகளையும் செய்து கொடுத்தேன். சுமார் இரு வாரங்களாக தினம்தோரும் காலையில் 350 இறாத்தல் பாணும் மாலையில் 350 இறாத்தல் பாணும் வழங்கி வந்தேன். இவ்வாறு எனது சொந்த நிதியிலிருந்து பல வகையிலும் நிவாரண பணிகள் நடந்தேற்றப்பட்டுள்ளன.

கொரோனா காலங்களில் எமது நகர சபை எம்பியூலன்ஸ் வண்டியும் மக்கள் தேவைக்காக 24 மணி நேரமும் சேவையில் ஈடுபட செய்திருந்தேன்.

கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் இணைந்து அவசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன். மக்களுக்கு தெளிவூட்டவும் விழிப்புணர்வு செயலமர்வுகள் ஆகிய ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தேன். இதே போன்றே டெங்கு ஒழிப்பிலும் மேற்கண்ட வாரான செயற்திட்டங்களை மேற்கண்டு எமது பிரதேசத்தின் சுகாதார நலனிலும் கூடிய கவனம் செலுத்தியுள்ளேன்.

**வினா : உங்களால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க பணிகள் குறித்தும் குறிப்பிடலாமா?**

**ஆமிர் :** எமது நகர சபை எல்லையில் சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இருந்து வந்த பெரும் குறை ஒன்றான தாய் சேய் மருத்துவ நிலையம் ஒன்றை எமது நகர சபை தலைமை என்னிடம் இருந்த போது நிர்மாணித்து கொடுத்துள்ளேன்.எமது முன்னைய அரசியல் தலைவர்கள் எவரும் செய்யாத இப் பாரிய சேவை என்னால் சாதிக்கப்பட்டதாக பலரும் போற்றியமையை நான் அறிவேன்.

அடுத்து களுத்துறை வடக்கு நாகஸ் சந்தியிலிருந்து தெற்கு நாகொட வைத்தியசாலை வரையிலான பிரதான வீதியில் இரவை பகலாக்கும் வண்ணம் அதிக ஒளிரும் மின் விளக்குகளை பொருத்தி சாதிக்கவும் செய்துள்ளேன். கொழும்புக்கு அடுத்து தென்னிலங்கையில் களுத்துறை நகரில் இதனை காண முடியும் என்பது எமது நகருக்கு பெருமை தான்.

இப் பகுதியில் 14 பாடசாலைகளுக்கு குப்பை கழிவகற்றல் தொகுதி உபகரணங்கள் பெற்றுக் கொடுத்துள்ளேன். இதுவும் டெங்கு ஒழிப்பில் வெற்றிகரமான பணியாக உள்ளது.

மற்றொரு குறிப்பிட்டத்தக்க பணியாக களுத்துறை போக்குவரத்து , கலீல் பிளேஸ ில் சுமார் 40-50 வருடங்களாக இருந்து வந்த காணிப் பிரச்சினைக்கு நான் நகர சபை தலைவராக இருந்த போது சம்பந்தப்பட்ட மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கி பிரச்சினைக்கு முடிவு கட்டி அவர்களுக்கு விடிவை கொடுத்தேன்.

மேலும் எமது நகர சபை நிதி ஒதுக்கீட்டுடன் பிரதேச அரசியல் வாதிகளின் நிதி ஒதுக்கீடுகளையும் பெற்று நகர சபை பகுதியில் சுமார் 90 வீதமான வீதிகள் காங்கிரீட், கார்பட், கல் பதித்தல் ஆகிய நிலையில் செப்பனிட செய்துள்ளேன்.

களுத்துறை முஸ்லிம்களின் இரு கண்களாக விளங்கும் களுத்துறை முஸ்லிம் தேசிய பாடசாலை களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூ ரி இரண்டிற்கும் அவ்வப்போது அதிபர் தேவை, ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் சந்தர்ப்பங்களில் உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொடுத்துள்ளேன். அவற்றின் பௌதிக வள தேவைகளையும் நிரைவேற்றி கொடுத்துள்ளேன்.கலீல் பிளேஸ் சமநல விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளதோடு வெட்டுமகட பாக்கிஸ்தான் விளையாட்டரங்கைச் சுற்றி வடிகால் கட்டிக் கொடுத்துள்ளேன். இதே போன்று பிரதேசத்தில் பல வடிகால்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**வினா : உங்கள் பகுதி வாக்காளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?**

**அமீர் :** எமது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணியில் மிகவும் சிறந்த அணியொன்றை அமர்த்தியுள்ளோம். மாநகர சபையை எமது அணி கைப்பற்றினால் தவிசாளர் உட்பட உயர் பதவிகள் எல்லாம் எங்களுக்குள்ளே தான் பகிர்ந்து கொள்ள முடியுமாகிறது. இந்த மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ முஸ்லிம் வேட்பாளர் எவருக்கும் தலைமை பொறுப்பு தருவதாக வாக்குறுதி தரவில்லை. இந்த நிலையில் முஸ்லிம்கள் அவர்களுக்கு வாக்களிப்பதில் எந்த வித நன்மையும் அடையப் போவதில்லை. மாநகர சபையை எங்களால் வெல்ல முடியாது போனாலும் எங்களால் குறிப்பிடத்தக்க ஆசனங்களையாவது கைப்பற்ற முடியும். இந் நிலையில் ஆளும் தரப்ளுக்கு வருவோரிடம் எங்களால் பேரம் பேச முடியும். அப்போது எமது சமூகத்துக்கும் எமது மக்களுக்கும் தேவையான பயன்பாடுகளை அடைய முடியுமல்லவா?! எனவே எமது மக்களே இதர அணிகளை மறந்து எமது மரச் சின்னத்திற்கு உங்கள் பெறுமதி மிக்க வாக்குகளை அளித்து எங்களை வெற்றி பெறச் செய்யுங்கள்.

இன்னும் எமது நகர சபை எல்லைக்குள் தீர்க்க வேண்டிய பணிகள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்த்து எமது நகரத்தை எமது தலை நகருக்கு நிகரான உயர் நகராக மிளிரச் செய்வோம். எங்கே உங்கள் வாக்குகளை அக் கனவை நனவாக்க போகிறது. மரச் சின்னத்தை மறவாதீர்கள்.



# அரசின் முஸ்லிம் விரோத போக்குக்கு எதிராக தேர்தலில் மக்கள் பாடம் புகட்ட வேண்டும்

## கஹட்டோவிட்ட கூட்டத்தில் றவூப் ஹக்கீம் கருத்து

(எம்.ஆர்.லுதுபுள்ளாஹ்)

எமக்கிழைத்து வரும் சமூக புறக்கணிப்புக்கு அனுர அரசாங்கத்துக்கு இம்முறை தேர்தலில் மக்கள் தெளிவான செய்தி ஒன்றை வழங்க வேண்டும் என கஹட்டோவிட்டாவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

அனுர அரசாங்கம் வந்ததில் இருந்து முஸ்லிம்கள் பல்வேறு விதங்களில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். ஆரம்பத்திலேயே இந்த நாட்டில் முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நியமிக்காமல் இருந்தது அது குறித்த நபருக்கான அழங்கரிப்பாகவோ, தனிப்பட்ட நபருக்கான ஆசனமாகவோ பார்க்கப்படுவதில்லை மாறாக இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த முஸ்லிம்களின் சார்பில் அந்த சமூகத்தை பிரதிபலிப்பதற்காக வழங்கும் அடையாளமாகும்.



இதுவரை வந்த எந்த அரசாங்கம் ஆக இருந்தாலும் அந்த அரசாங்கத்தில் கட்டாயமாக முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தே வந்துள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறு முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பது முஸ்லிம்களை கிள்ளுக் கீரையாக்கி அவமதிப்பு செய்யும் சமூக புறக்கணிப்பாகும் சர்வதேச ரீதியில் கூட முஸ்லிம் அமைச்சர் நியமனத்தை அந்த நாட்டு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமான அடையாளமாகவே பார்க்கிறார்கள். அந்த அடையாளத்தை கூட அனுர அரசாங்கம் முஸ்லிம்கள் தரப்புக்கு வழங்காதது மிகவும் வருத்தமளிக்க கூடியதும், சமூகத்தை அவமதிக்ககூடியதுமான செயற்பாடாகும் என்று கஹட்டோவிட்ட வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் சமீபத்தில் ஹொரகொல்ல முஸ்லிம் இளைஞன் ஒருவரை அநியாயமான முறையில் இஸ்ரேலிய அராஜகர்களின் இனவழிப்பு தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தனது எதிர்ப்பை வெளியிட ஒட்டப்பட்ட சாதாரண இஸ்டிகர் ஒன்றுக்காக பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு பல வாரங்கள் விசாரணை நடாத்தி இருந்தார்கள் இதற்கு கையொப்பமிட்டதும் பாதுகாப்பு அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க ஆகும்.

தற்போது இந்த அரசு யூத சியோனிஸ்டுக்களின் ஏஜெண்டாக மாறியுள்ளது. இஸ்ரேல் யூதர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது , அவர்களுக்கான மத வழிபாட்டுத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் முக்கிய இடங்களுக்கு அரசு இராணுவப் பாதுகாப்பு கூட வழங்கி வருகிறது. முஸ்லிம்களின் மீது விரோத போக்கை அரசாங்கம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்காக முஸ்லிம்கள் சரியான எதிர்ப்பை காட்ட வேண்டும். அதற்காக அவர்களுக்கு சரியான செய்தியை வழங்க வேண்டும்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் இம்முறை மக்கள் இந்த போக்குக்கு எதிராக சரியான செய்தி ஒன்றை வழங்க வேண்டும். அந்த செய்தியை அனுர அரசாங்கத்திற்கு வழங்க இத்தேர்தலை நன்றாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் எனவும் முஸ்லிம்கள் தொடர்ந்தும் அடிமைத்தனமாகவோ, புறக்கணிக்கப்பட்ட சமுதாயமாகவோ இருக்க முடியாது நிச்சயமாக இம்முறை அனுர அரசாங்கம் தமக்கு காணப்படும் பெரும்பான்மை ஆதரவு சரிவை காணக்கூடியதாக இத்தேர்தல் அமையவுள்ளது , கிழக்கிலும் நாடளாவிய ரீதியிலும் இவ்வாறானதொரு சரிவை இந்த அரசு கண்டு கொள்ளும் எனவும், சமூக சேவைகள் ஆற்றிய அல்ஹாஜ் பிர்தௌவஸ் அவர்களின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது கஹட்டோவிட்ட வாழ் மக்கள் நிச்சயமாக ஹாஜியாரை வெற்றி பெற செய்வார்கள் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார் .

இக்கூட்டத்தில் கட்சியின் ஏனைய வேட்பாளர்கள், பெருந்திரளான ஊர் மக்கள் கலந்து கொண்டதை காணக்கூடியதாக இருந்தது.

## முன்மாதிரியான சபையாக நாவிதன்வெளி பிரதேச சபையினை மாற்றியமைப்போம்

### கால்பந்து சின்ன சுயேட்சை வேட்பாளர் எம்.ஏ.நளீர்





(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

நாவிதன்வெளி பிரதேசத்தில் வாழும் மூவின மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சேவை செய்து ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியான சபையாக நாவிதன்வெளி பிரதேச சபையினை மாற்றியமைப்போம் என கால்பந்து சின்ன சுயேட்சை வேட்பாளர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

வேட்பாளர் வாஜித் தலைமையில் ஐந்தாம் கிராமம் சாளம்பைக்கேணி மத்தி வட்டாரத்தில் கால்பந்து சின்னம் சுயேட்சை வேட்பாளர் சுபைதீன் அவர்களை ஆதரித்து அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இதனை தெரிவித்தார்.

இதன் போது அவர் கருத்து தெரிவிக்கையில்..

கடந்த காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் அரசியல் வாதிகளுக்கு இத் தேர்தலின் மூலம் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் எனவும் சில கட்சி அரசியல்வாதிகள் மக்களின் அபிவிருத்தி திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதியில் மோசடிகள் செய்து அவர்களின் பைகளை நிரப்புகின்ற சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்பட்டதை நாம் அறிவோம்.

இவ்வாறான ஊழல்வாதிகளை விரட்டியடிப்பதற்காக நாங்கள் எவ்வித கட்சியும் சாராமல் இத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுகின்றோம்.

இதன் மூலம் மக்களுக்கு பல்வேறு பட்ட சேவைகளை வழங்கி ஏனைய சபைகளுக்கு ஓர் முன்மாதிரியான சபையாக நாவிதன் வெளி பிரதேச சபையை மாற்றியமைப் போம் எனத் தெரிவித்தார்.

மேலும் நாங்கள் கடந்த காலங்களில் பல கிராமங்களுக்கு பல்வேறு பட்ட சேவைகளை செய்து காட்டியுள்ளோம். தனிப்பட்ட ரீதியாக பல்வேறு பட்ட நாடுகளின் நிறுவனத் தலைவர் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்து உரையாடி அவர்களின் நிதிப் பங்களிப்பின் ஊடாக கிராம மக்களுக்கு பல உதவித் திட்டங்கள் எமது அமைப்பின் ஊடாக மேற்கொள்ளப் பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. அது மட்டுமல்ல ஒரு அரசியல் வாதியால் கூட செய்ய முடியாத வேலைத்திட்டங்களை கூட நாங்கள் செய்திருக்கின்றோம்.

இக்கிராம மக்கள் ஒன்று மட்டும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று எமக்கு கிடைக்கும் அதிகாரத்தின் ஊடாக அச்சமின்றி மக்களின் உரிமைக்காக செயற்பட முடியும் என்பதோடு எமக்கு கிடைக்கப்பெறும் சம்பளப் பணத்தினை கூட முழுமையாக மக்களின் நலனுக்காகவே பயன்படுத்துவோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கால்பந்து சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் நாங்கள் அமோக வெற்றி பெறுவது நிச்சயம். இருப்பினும் வட்டாரத்தை வென்றெடுப்பதற்காக இக்கிராம மக்கள் பெறுமதியான தங்களின் வாக்குகளின் ஊடாக எங்களை ஆதரிக்க வேண்டும் எனவும் கால்பந்து சின்னம் சுயேட்சை தலைமை வேட்பாளர் எம்.ஏ.நளீர் இதன்போது வேண்டிக்கொண்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உதவி தவிசாளர் ஏ.கே.அப்துல் சமட், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன் மற்றும் கால்பந்து சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கோறளைப்பற்று மத்தியில் தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்



(எஸ்.எம்.எம்.முரஷித்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்கள த்தின் அனுசரனையில் இயங்கும் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவிகளின் கண்காட்சியும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வாழைச்சேனை 206னு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் கே.இளங்குமுதன், கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஏ.ஜூமானா ஹஸீன், மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.கோகுலராஜன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட தையல் போதனாசிரியை திருமதி என்.ரவிச்சந்திரன், கிராம சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றம்ளான், நிருவாக உறுப்பினர்கள், தையல் பயிற்சி ஆசிரியை மற்றும் பயிற்சி பெற்ற மாணவிகளும் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அதிதிகளைக் கௌரவித்து மாணவிகளால் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# சீண்டிப் பார்க்கும் குட்டித் தேர்தல்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏற்பாடுகள் பூர்தியடைந்துள்ளன. தேர்தல் 2025.05.06 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. இந்த தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 107 அரசியல் கட்சிகள் மற்றும் 49 சுயேட்சை குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்து வேட்பாளர்களை களத்தில் இறக்கி உள்ளன. பிரதான அரசியல் கடசிகள் வரிசையில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு. கட்சி கூட்டணி, சர்வஜன சந்த பலய, ஐ.தே. கட்சி, கிழக்கில் ஸ்ரீ.ல.மு.கா. கட்சி, ரிசாட் அணி, அதாஉல்லாஹ் அணி என்று சில முஸ்லிம் கட்சிகள், வடக்கில் தமிழ் கட்சிகள் பல ஆகியவற்றுடன் சுயேட்சைக் குழுக்கல் பலவும் களத்தில் இறங்கி போட்டியிடுகின்றன. மாநகர சபைகள் 28, நகர சபைகள் 36 மற்றும் பிரதேச சபைகள் 272 ஆகியவவை உள்ளடங்களாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற இருக்கின்றன. இவற்றுள் பிரதான அரசியல் கட்சிகளின் எதிர்பார்ப்பே முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன.

2023 ஆம் ஆண்டு இதே தேர்தலுக்கான வேட்புமனுக்கல் தாக்கல் செய்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவால் தேர்தல் பின்போடப்பட்டது. நாட்டின் மோசமான பொருளாதார நிலையை காரணம் காட்டி தேர்தல் நடத்த 1000 கோடி ரூபா பணம் இல்லை என்ற காரணத்தை முன்வைத்து தேர்தலை பின்போட்டார். பின்னர் சரியாக இரண்டு வருடங்களின் பின்னர் புதிதாக வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டே இந்த தேர்தல் 06 ஆம் திகதி நடத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் ஏற்கனவே பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் என்று 2024 ஆம் ஆண்டு இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டு நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்ட பின்னர் குறகிய கால இடைவெளிக்குள் இந்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றள்ளன. ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியான ஆளும் கட்சி பின்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவோம் என்று வாக்குறுதிகளை வழங்கி இருந்ததால் இம்முறை தேர்தலை பின்போட முடியாத நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தோர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் குறுகிய காலத்தில் ஜே.வி.பி. யின் மறு வவடிவமான தேசிய மக்கள் சக்தியின் கண்ட எதிர்பாராத எழுச்சி காரணமாக பிரதான அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டபாதிப்பு மிக மோசமானதாக அமைந்திருந்தது.

பிரதான எதிர்க் கட்சியான சமகி ஜனபலவேகய என்ற பெயரிலான ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குப் பலம் நடந்து முடிந்த ஜனாதிபதீ தேர்தலில் 56 இலட்சத்தில் இருந்து 43 இலட்சமாக வீழ்ச்சி கண்டது.

அதன் பின்னர் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேலும் பின்னடைவு கண்டு 19 இலட்சத்து 68 ஆயிரமாக படு மோசமான வீழ்ச்சியை கண்டது. அவ்வாறே 2024 செப்டம்பர் பொதுத் தெர்தலில் ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணி 500,835 வாக்கு களையும் 2019 மற்றும் 2020 தேர்தல்களில் 69 இலட்சம் வாக்குப் பலத்தை பெற்றிருந்த பொது ஜனபெரமுன கட்சி நாமல் ராஜபக்ஷ தலைமையில் 350,429 என்ற நிலைக்கு பின் தள்ளப்பட்டது.

வடக்கில் தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 257,813 வாக்குகளையும் கிழக்கை பிரதானமாகக் கொண்டு தனித்து போட்டியிட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி 87,038 வாக்குகள் என்ற அடிப்படையிலும் பாரிய பின்னடைவுகளை சந்திக்க நேரிட்டன. எதிர்பாராத விதமாக 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி எழுச்சி கண்டதால் ஏற்பட்ட அரசியல் மாற்றமே மரபு ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகள் வீழ்ச்சி காண அடிப்படை காரணமாக அமைந்தது எனலாம். 2024 செப்டம்பர் மாதம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மொத்தமாக 6,863,186 வாக்குகளை பெற்றுக் கொண்டது. அக்கட்சி 2024 ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 5,634,915 ஆகும். ஆனால் பொதுத் தேர்தலில் மேலும் 12 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்று மேலும் மக்க்ள ஆதரவை பலப்படுத்திக்கொண்டது.

எவ்வாறாயினும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த 08 மாத காலத்தில் நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள், மக்களது வாக்கைச் செலவு உயர்வை குறைக்க ஏற்படுத்திய தாக்கம் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து பார்த்தால் தொடர்ந்தும் பொதுத் தேர்தலில் இருந்த மக்கள் ஆதரவு இருக்கின்றதா அல்லது வீழ்ச்சி கண்டிருக்கின்றதா என்பதை கண்டு கொள்ள நல்ல வாய்ப்பாக இந்த தேர்தல் அமைய இருக்கின்றது. அவ்வாறு தேசிய மக்கள் சக்தி ஏதாவதொரு வகையில் வீழ்ச்சியை நோக்கி செல்வதாக இருந்தால் அந்த வீழ்ச்சி அல்லது மக்கள் ஆதரவிலான பின்னடைவு கடந்த பொதுத் தேர்தலில் படு தோள்வியை தழுவி வாக்குப்பலம், மக்கள் ஆதரவை இழந்த கட்சிகளின் மீள் எழுச்சிக்கு வழிவகுப்பதாக அமையலாம்.

அதிலும் பிரதான எதிர்க் கட்சியாக இருந்து வரும் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (சஜப) மற்றும் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ஐ.தே. கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சி என்பவற்றின் மீள் எழுச்சி எவ்வாறு அமையும் என்பது முக்கியமானதாகும். ஆனாலும் தற்போதைய நிலையில் இந்த அரசாங்கத்தால் புதிதாக எந்தவிதமான மாற்றத்தையும் இதுவரையில் ஏற்படுத்த முடியாமல் போனாலும் மக்களின் மனதை கவர்ந்து இழுத்தெடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் உரைகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அரசாங்கம் என்ற வகையில் இதுவரையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்திலான மாற்றம் என்பவற்றை இலக்காகக் கொண்ட திட்டங்களை முன்வைக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்தும் கடந்த ஆட்சியாளர்களது முறைகேடுகளையும் ஊழல்களையும் தேடி எடுத்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து மக்கள் ஆதரவை தேடுவதோடு ஏனைய அரசியல் கட்சிகள் குறித்த மக்களது வெறுப்பை தூண்டும் வேலைகளை எந்தவிதமான மாற்றங்களும் இன்றி ஜனாதிபதி முதல் அனைத்து தேசி மக்கள் சக்தி உறுப்பினர்களும் செய்து வருகின்றனர். புதிதாக எதுவும் இல்லை.

இதற்கிடையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பது தொடர்பாக அரச மட்ட விசாரணை கமிட்டி நியமிக்கப்பட்டு கிடப்பில் இருந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை புரட்டும் வேலைகள் ஆரம்பமாகி இருக்கின்றன. அந்த அறிக்கையின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட குறைந்தபட்சம் மேலும் இரண்டு வருடங்களாவது செல்லும் என்று ஊகிக்கலாம். ஏனெனில் அந்த ஆணைக்குழு அறிக்கை 67000 பக்கங்களைக் கொண்டதாகும். ஓரிரு வாரங்களில் படித்து முடிக்க முடியாது. அதனால் சூத்திரதாரிகளை கண்டுகொள்ள மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். இதற்கிடையில் 2025.04.05 ஆம் திகதி முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் கைது அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 2025.04.28 ஆம் திகதி ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டு சில மணி நேரங்கள் விசாரணை செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் மக்கள் மத்தியில் பேசு பொருளாக மாறினாலும் அவை இந்த தேர்தலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

இந்நிலையில் நடந்து முடிந்த மே 01 ஆம் திகதி கொண்டாடப்பட்ட மேதின கொண்டாட்டங்களும் இம்முறை அவ்வளவாக சோபிக்கவில்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் பிரதான அரசியல் கட்சிகள் உட்பட தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் 25 மேதின கூட்டங்களை நடத்தியதாயினும் மேதின ஊர்வலங்களை நடத்தவில்லை. தேசிய மக்கள் சக்தியின் (என்.பி.பி) மேதின கூட்டம். கொழும்பு காலி முகத்திடலில் நடைபெற்றதாயினும் ஊர்வலம் நடக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி (சஜப) மேதின கூட்டம் மலையகத்தில் லிந்துலையில் நடத்தப்பட்டதாயினும் ஊர்வலம் நடக்கவில்லை. பொது ஜனபெரமுன கட்சியின் மேதினக் கூட்டம் நுகெகொடையில் நடத்தப்பட்டது. ஸ்ரீ.ல.சு.கட்சி. அதன் தலைமையகத்தில் சாதாரண கூட்டம் ஒன்றை நடத்தியது. சர்வஜன சந்த பலய கட்சியின் மேதினக் கூட்டம் வரகாபொலையில் இடம்பெற்றது. இவ்வாறாக ஆங்காங்கே மேதினக் கூட்டங்கள் நடைபெற்றாலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்னும் இரண்டு தினங்களில் நடைபெற இருப்பதால் தேர்தலை இலக்குவைத்து அரசிற் போக்குகளை கண்டிக்கும் வகையில் அநுரகுமார திசாநாயக்காவின் போக்கை கண்டிப்பதற்காக இந்த மேதின மேடைகளை பயன்படுத்தின எனலாம்.

அதிலும் பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு.கட்சி, மீண்டும் யாணை சின்னத்தில் போட்டியிடும் ஐ.தே.கட்சி போன்ற கட்சிகளுக்குள் ஏற்கனவே சில உட்பூசல்களும் நடந்து வருவதால் சரியான முறையில் திட்டமிட்டு கோளாகலமான முறையில் மேதினத்திதை கொண்டாட முடியாத நெருக்கடி நிலை காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். எவ்வாறாயினும் ஏதோ ஒருவகையில் கடந்த இரண்டு தேர்தல்களிலும் மிக மோசமான பின்னடைவை சந்தித்து மக்கள் ஆதரவை இழந்து தவிக்கும் அரசியல் கட்சிகளுக்கு இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏதோ ஒருவகையில் நிம்மதி பெருமூச்சு விட செய்யலாம் என்று கருத இடமிருக்கின்றது. அரசின் கடந்த 07 மாத கால ஆட்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்ற அடிப்படையில் மக்களை ஏமாற்றிவிட்டது என்ற பிரசாரங்களின் மூலம் இழந்த செல்வாக்கை மீண்டும் அடைந்து தமது கட்சிகளின் வாக்குப் பலத்தை ஓரளவுக்காவது அதிகரிக்கச் செய்ய இந்த தேர்தல் கைகொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் ஆளும் கட்சியான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமை யிலான தேசிய மக்கள் சக்தியின் மக்கள் ஆதரவு எதிர்பார்க்கின்ற அளவிற்கு சரிவடையும் சாத்தியக் இல்லை. "ஊரின் அதிகாரத்தை வழங்குங்கள்" என்ற அடிப்படையில் ஆளும் கட்சியின் பிரசாரப் பணிகள் அமைந்திருக்கின்ற நிலையில் மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கு சரியும் வகையில் மக்கள் பெரிதாக எதையும் அலட்டிக் கொண்டதாக தெரிய வில்லை. ஊழல், மேசாடிகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் கடந்த ஆட்சி காலத்தில் அரச சொத்துக்களை திருடி துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு இன்னும் இருந்துகொண்ட இருக்கின்றன. அதே நேரம் இந்த தேர்தல் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கு ஒரு சத்திய சோதனையாக மாறி இருக்கின்றது. ஏற்கனவே பொதுத் தேர்தலில் இருந்த மக்கள் ஆதரவை இக்கட்சிகள் இந்த தேர்தலில் இழந்து மேலும் பின்னடைவை சந்தித்தால் எதிர்வரும் காலங்கள் சஜித் பிரேமதாசாவுக்கும் நாமல் ராஜபக் ஷவுக்கும் பாரிய தலையிடியை ஏற்படுத்தலாம். கட்சி மேலும் சிதறுண்டு செல்வாக்கிழக்கும் நிலை உருவாகும்.

ஏற்கனவே பொதுத் தேர்தலில் ரனில் விக்கிரமசிங்காவுடன் இணைந்திருந்த பொதுஜன பெரமுனவின் மஹிந்த மற்றும் கோதாபய ஆதரவு முன்னால் அமைச்சர்கள் அனைவரும் மீண்டும் நாமல்லின் கரங்களை பலப்படுத்த ஆதரவு வழங்க மஹிந்த ராஜபக்ஷ முகாமுக்குள் சென்று விட்டனர். ஆனாலும் ரனில் சற்றும் சலைக்காதவராக யானைச் சின்னத்தில் நாடளாவிய ரீதியில் வேட்பாளர்களை களம் இறக்கி தேர்தலை சந்திக்கின்றது. யானைக்கு மீண்டும் மக்கள் ஆதரவு எவ்வாறு அமையப்போகின்றது என்பதையும் இந்த தேர்தல் முடிவுகள் காட்டலாம். அத்துடன் கிழக்கில் ஸ்ரீ.ல.மு.கா. கட்சிக்கும் அதற்கு எதிரான ஏனைய முஸ்லிம் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுகிகடையில் கடும் போட்டி நிலவுகின்றது.

தேர்தல் மேடைகளில் ரவுப் ஹக்கீமின் செல்வாக்கை சரிக்க கடுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கிலும் மரபு ரீதியான தமிழ் கட்சிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலை ஏற்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் அனைத்து விதமான தேர்தல் எதிர்பார்ப்புகளுக்கும் தகுந்த பாடம் கற்பிக்கும் தினமாக மே 06 ஆம் திகதி அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதே நேரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மிகவும் திறமையான அறிவும் ஆற்றல்களும் ஆளுமை திறனும் உள்ள வேட்பாளர்களை தெரிவு செய்வது மக்களது கடமையும் பொறுப்புமாக இருக்கின்றது. வாக்காளர்களாகிய பொதுமக்கள் சிறிய தேர்தல் என்ற உதாசீனப் போக்கில் இல்லாமல் ஆளமாக சிந்தித்து தமது வாக்கை பயன்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளனர்.









# உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு

இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் பொன்விழாவும், உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாவது மாநாடும், எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில், இந்தியா - தமிழ் நாடு, திருச்சி எம்.ஐ.இ.டி. பொறியியல் கல்லூரியில், வெகு விமர்சையாக நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

"இணைப்பே இலக்கியம்" என்பதே, இம்மாநாட்டின் சிறப்பு முழக்கமாகும். பழையன பாராட்டப்படவும், புதியன ஊக்குவிக்கப்படவும், மனித உறவுகள் மதிக்கப்படவும், ஒற்றுமைக் கயிறு வலிமைப் படவும், இஸ்லாமிய இலக்கியக் கழகப் பொன்விழா - உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு வழிகோலும். தமிழ் நாடு வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இறையருளால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் சிறப்பினைப் பெறவல்ல இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகள், இஸ்லாமிய இலக்கியக் கழகத் தலைவர் பேராசிரியர் முனைவர் சே.மு.மு. முகமதலி, பொதுச் செயலாளர் பேராசிரியர் முனைவர் மு.இ. அகமது மரைக்காயர், பொருளாளர் அல்ஹாஜ் எஸ்.எஸ். ஷாஜஹான் உள்ளிட்ட குழுவினரால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் இருந்தும் மாநாட்டு இணைப்பாளர்களாகச் செயற்பட்டு வரும் பொறியியலாளர் நியாஸ் ஏ. மஜீத், டாக்டர் தாஸிம் அஹமத் ஆகியோர், மாநாடு தொடர்பான தகவல்களை அவ்வப்போது மாநாட்டுக் குழுவினருக்கு இறுதிவரை அறிவித்துக் கொண்டிருந்த மையும் பாராட்டத்தக்கது.

**திருச்சியில் மே 9,10,11 ஆம் திகதிகளில்**

*** தலைமை - இஸ்லாமிய இலக்கியக் கழகத்தலைவர் பேராசிரியர் சேமுமு முகமதலி**

*** பிரதம அதிதி - (முதல்நாள் நிகழ்வில்) தமிழக முதல்வர் மு.கா. ஸ்டாலின்**

தமிழக முதல்வர் மு.கா. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சட்டப் பேரவை சபாநாயகர், அமைச்சர்கள், மூத்த அறிஞர்கள் அரசியல் மற்றும் சமுதாயத் தலைவர்கள், உலமாப் பெருந்தகைகள், படைப்பாளர்கள் முதலான பலரும் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப் பட்டிருக்கிறார்கள். இலங்கையில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் (பா.உ.) நிஸாம் காரியப்பர் ஆகியோரும் பங்குகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஓமான், குவைத், கட்டார், சவூதி அரேபியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்தும் அதிக பேராளர்கள் பங்குபற்றும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கையில் இருந்தும் சுமார் 60 பேராளர்கள் சமூகமளிக்க வுள்ளனர்.

உலகெங்கிலுமுள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அறிஞர்கள், கல்வியாளர்கள், படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பற்றிய விவரக் குறிப்புக்களும், ஒளிப் படங்களும் கொண்ட "யார் - எவர்" எனும் நூல் மாநாட்டில் வெளியிடப் படவுள்ளது.

மாநாட்டில் ஆய்வரங்கம், கருத்தரங்கம், மார்க்க அறிஞர் அரங்கம், கவியரங்கம், தீனிசையரங்கம், மகளிர் அரங்கம், ஆய்வுக் கோவை, மாநாட்டுச் சிறப்பு மலர், இலக்கியக் கழக நூல்கள்" முதலியனவும் வெளியிடப்படவுள்ளன.

தமிழக முதல்வர் மு.கா. ஸ்டாலின் முதல்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்குகொண்டு சிறப்புரையாற்றும் இம்மாநாட்டில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம். காதர் மொகிதீன் தொடக்க வுரையாற்றவுள்ளார். தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் "ஒன்பதாவது மாநாட்டின் சிறப்பு மலர், ஆய்வுக்கோவை, யார் - எவர்" ஆகிய நூல்களை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

பேராசிரியர் முனைவர் தி.மு. அப்துல் காதர் தலைமையில் 20 உலகக் கவிஞர்கள் குழு அடங்கிய "சிறப்புக் கவியரங்கம்" ஒன்றும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா தலைமையில் அரங்கேறும் "மகளிர் அரங்கம்" நிகழ்வில் 150 பெண் ஆர்வலர்கள் பங்கேற்கவுள்ளனர். சமுதாயப் பாடகர்கள் கலந்து கொள்ளும் "தீனிசைத்தென்றல் அரங்கம்" நிகழ்வில் 12 பிரபல இஸ்லாமியப் பாடகர்களும் கலந்து, மக்களை இன்னிசை மழையில் நனைக்கவுள்ளனர். நீதி அரசர் ஜீ.எம். அக்பர் அலி தலைமையில் இடம்பெறும் இறுதி நாள் நிகழ்வில், நூல்கள் வெளியிடல், விருதுகள் வழங்கல் முதலான நிகழ்வுகள் சிறப்புப் பெறவுள்ளன.

இலங்கை முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், "ஊடக அரங்கு" நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, ஊடகவிய லாளர்களுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் நெறிப்படுத்த உள்ளார்.

இச்சிறப்பு மாநாட்டின் முக்கிய சிறப்பம்சமாக, தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு கலந்து கொண்டு அறிஞர்கள், எழுத்தாளர்கள் 26 பேருக்கு, 20 ஆயிரம் இந்திய ரூபா பெறுமதி வாய்ந்த பொற்கிழிகளும், "இலக்கியச் சுடர்" விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எழுதியவர் :

**ஐ. ஏ. காதிர் கான்**



# அருவிக்கரை



நாச்சியாதீவு பர்வீன்



# "கடல் முற்றம்" ஆர்த்தெழும் பெண் குரல்

**கடந்த வார தொடர்ச்சி...**

**லறீனா அப்துல் ஹக்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழிகள் துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

இருப்பதாகப் பம்மாத்துக் காட்டிக்கொண்ட இஸ்லாமிய இயக்கங்களின் தலைமைகளும் சரி, சவூதி அரசின் அராஜகம் தொடர்பில் மூச்சுவிடவில்லை. மாறாக, மார்க்கத்தின் பெயரால் பூசி மெழுகித் தம் பிழைப்புவாத மார்க்க அரசியலைக் கச்சிதமாக முன்கொண்டு சென்றார்கள். அவர்களின் மார்க்க அறிவு, நீதியை நிலைநாட்டுவதற்குப் பயன்படவில்லை. மாறாக, அதிகாரத்தின் அராஜக இருப்பினைப் பாதுகாக்கும் அரணாகவே தொழிற்பட்டது. அவ்வகையில், "தங்கை ரிசானாவிற்கு" கவனங் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு கவிதையாகும்.

ஆசிரியம் எனும் விழுமியம் கவிதாயினியாகவும், இலக்கிய விமர்சகியாகவும், கட்டுரையாளராகவும் பன்முகம் காட்டும் ஃபாயிஸா அலி, தொழிற்துறை சார்ந்து ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையும்கூட. அவ்வகையில், அவரது கவிதைகள் பாடசாலையை, வகுப்பறையை, மாணவர்களை, ஆசிரியர்களை மையப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள், பின்தங்கிய, சிதைவுற்ற குடும்பங்களால் குழந்தைமை சிதைக்கப்பட்ட, பாலியல் சேஷ்டைகளால் சுரண்டலுக்கு உட்பட்ட மாணக்கரின் துயரங்களை மனம் வலிக்க வலிக்கப் பதிவு செய்துள்ள கவிதைகளும் அடங்கும். உதாரணமாக,

"மடியேந்தி மார்பூட்டுகையில்
அடுத்த மிடருக்காய் விரிந்த
பிஞ்சு உதடுகள் விலக்கி
வீசிவிட்டுப் போனாளாம்
விவாகரத்தான இவனன்னை
கதகதப்பான அரவணைப்பிற்கான
தீரா ஏக்கந்தான்
அடிமனசில் அழுந்தியழுந்தி
இவனை

அடாவடியாய்
ஆக்கியிருக்குமோ
மறுபடியும் கூச்சல்..
குழப்படி சண்டை

முறைப்பாடுகள்

செவிப்பறை
மென்சவ்வுகளில்
குருதி
கசியத்தொடங்கும்

பொறுக்கவியலாத
இப்பொழுதினிலும்

ஓங்கிய பிரம்பை நழுவ விட்டு

இவன் உச்சந்தலை தொட்டு
நகர்கிறேன்..

விழியோரமாய் துளிக் கருணை
யினை வழிய விட்டு" (வகுப்பறை, ப. 78)

எனும் வரிகளையும், உன்னதமான ஆசிரியப் பணியில் இருந்து கொண்டே மனதில் முளைத்தெழும் காமப் பிசாசின் கொடுங்கரங்களை அடக்கத் தெரியாமல் பிஞ்சுச் சிறார்கள் மீது நீட்டிச் சுரண்டும் காமுகக் கொடூரர்களின் முகமூடிகளை உரித்துக் காட்டும்,

"சொற்களால்
உடல்மொழியால்
விபரித்தவைகளை
இன்னும் விசும்பல்களில்

இடைவெளிகளை நிரப்பிக்
கொள்ளுமளவிற்கு

நான் உணர்ந்தவைகளை

எந்தத் தரவரிசை
அளவிடைகளூடும்

இட்டுநிரப்ப மறுக்கிறது என்
பேனா.

வேலியே பயிரை மேய்தலின்

அசிங்கங்களின் அருவருப்புகளை
ஈரமல்லிகையின்
நறுமணங்களோடு

இணைத்துப் பதிவிட
ஒருபோதும் என்னால் முடியாது" (வேலியே பயிரை மேய்தல், ப. 34) எனும் வரிகளையும் குறிப்பிடலாம். அவ்வாறே, "துரோசீரா" (ப.35) எனும் கவிதை அனாதை விடுதிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் காவலரண்களிலும், விகாரைகளிலும் நசித்துச் சுரண்டப்படும் அப்பாவிச் சிறுவர்களின் துயரினை அறச்சீற்றத்தோடு முன்வைக்கின்றது. இவை யாவும் சின்னஞ்சிறார்களின் வலிகளின் வடுக்களையும் தாங்கி நிற்கும் ஆசிரியமும் ஒருவகைத் தாய்மைதான் என்ற உணர்வினை எமக்குத் தருகின்றன.

இவைதவிர, உரிய ஆய்வுகூட வசதிகளற்ற பாடசாலையில், போக்குவரத்து வசதிகள் கிடைக்கப்பெறாத கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் படும் அவலங்களையும், அவற்றைப் புரிந்து கொள்ளும் திறனற்ற மேலதிகாரிகளின் அலட்டல்களையும், அதனால் ஆசிரியர்கள் அடைகின்ற மன உளைச்சல்களையும் வெளிக்காட்டும் கவிதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. "கடல்கிழித்து விரையும் இயந்திரப் படகின்" (ப.57), "கருஞ்சுவரில் குழாய் வரைந்து" (ப.74) ஆகிய கவிதைகள் அவற்றுக்கான சிறந்த உதாரணங்கள் எனலாம்.

மேலும், வலது குறைந்த சிறுவனைப் பற்றிய "அவன் மட்டுந்தான் பேரழகு" (ப.24) மிக முக்கியமான மற்றொரு கவிதையாகும். வயது குறைந்த ஒரு குழந்தையின் தாய் குடும்பத்திலும், சமூகத்திலுமாய் எதிர்கொள்ள நேரும் இடர்களும் இகழ்ச்சிகளும், அதனால் அவளடையும் பரிதவிப்பும் கழிவிரக்கமும் எத்தனை கொடுமையானது என்பதை அச்சொட்டாய்ச் சித்திரிக்கும் அற்புதமான கவிதை அது.

இவை தவிர, "விடியல்" (ப. 14), "வெளுக்கும் கிழக்கு" (ப. 32), "அபூர்வம் நீ" (ப. 68), "அயல்வீட்டுப் பீர்க்கங்கொடி" (ப. 69), "சூரியன்" (73) ஆகிய கவிதைகள் கவிதைசொல்லி சுற்றுச்சூழல் மீது கொண்டிருக்கும் ஆழ்ந்த நேசத்தையும், இயற்கை மீதான இரசனை உணர்வினையும், தனது அழகியல் உணர்வினையும் பிரதிபலிக்கும் அற்புதமான வரிகளைக் கொண்ட கவிதைகள் எனலாம்.

அறிவியலும் அழகியலும் இரண்டறக் கலந்து எந்த ஒரு படைப்பும் வாசகரின் மனதை ஈர்ப்பதில் அதன் மொழிநடை முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால், அது மிகையல்ல. ஒரு பிரதியின் எழுத்து முறையை வைத்தே அது இன்னாருடைய படைப்பு எனச் சட்டென இனங்காணத்தக்கவாறு எழுதுவது ஒரு தனிக் கலைதான். இதனையே, "ஒவ்வொரு எழுத்தாளனிடமும் அல்லது கவிஞனிடமும் காணப்படும் சில தனிப்பண்புகளே நடை என்று கருதப் படுகின்றது" (ஆக்க இலக்கியமும் நடையியலும், 1977:78) என்று மொழி 'நடை'க்குரிய வரைவிலக்கணத்தினைக் குறிப்பிடும் எம். ஏ. நுஃமான், "நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித் தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப்பாங்கே அது" (மேலது), எனும் முர்ரே என்பாரின் கருத்தையும் மேற்கோள் காட்டுகின்றார்.

இந்நிலையில், ஃபாயிஸா அலியின் கவிதைகளில் வெளிப்படும் அவரது மொழிநடை மிகவும் தனித்துவமானது. பயிற்றப்பட்ட அறிவியல் பாட ஆசிரியை என்பதாலோ என்னவோ அவரது மொழியில், அத்துறை சார்ந்த சொற்பிரயோகங்கள் உவமைகளாகவும் சம்பவ விவரணங்களாகவும் ஆங்காங்கே கவிதை வரிகளெங்கும் கொட்டிக் கிடக்கின்றன.

"படபடக்குஞ் சிறுவண்ணாத்திப்
புலன்களுக்குள்

குவியமிலா நெடுங்கனவுச்
சிதறுகை

கரைந்திடுங் கணங்களில்
வர்ணங்களின் பிசுபிசுப்பும்
படபடப்பின் அமர்முடுகலும்"
(விடுதலை, ப.16)

"அடர்வனங்களில்
நச்சுப் பூச்சுகளுக்காய் தம்
நிறைசுரப்புகளோடு
நிமிர்ந்தெழலாம் துரோசீராக்கள்"
(துரோசீரா, ப.35)

"வட்டவட்டக் குழிவாடிகளும்
மெல்லிய குண்டூசிகளுமாய்த்
தொடங்கிற்று
ஒளியியல் தொடர்பான
அச்செயற்பாடு" (கருமை, ப. 44)

"மென்காந்தம் தூரிகையாகி
எமை வரைந்திருக்குமோ?"
(மெல்லப்பரவுது, ப.46)

"ஒரு குண்டுமுனைக்
காந்தம்போலே" (மைதானம், ப.49)

"பச்சிலையின் விரல்நுனியின்
உயிரணுக்களையெல்லாம்

மின்னணுக்களாய்
மாற்றிவிட்டபடி

திசைமாறிப் பறக்கிறது
வண்ணத்துப்பூச்சி" (இல்லாத ஒன்றுக்காய், ப.51)

"ஆய்ந்து முடித்ததுதான் நியூற்றன் விதியெனில்" (மின்வரிகள், ப. 53)

"தெளிந்தநீர் மேலே பொட்டுப்
பொட்டாய் பச்சையங்கள்"
(மாயை, ப.60)

முதலான வரிகளை அதற்கான உதாரணங்களாகச் சுட்டிக்காட்டலாம். அவ்வாறே, "ஒளிநார் போன்ற ஞாபகங்கள்", "வசீகர மொழிக்காவி", "முற்றுப்புள்ளியின் திசை", முதலான தலைப்புக்கள் கவித்துவ வீச்சோடு அமைந்துள்ளன எனலாம்.

முடிவுரை

எந்தவொரு படைப்புச் செயற்பாட்டிலும் அழகியலுணர்வோடு அரசியல் விழிப்புணர்வோடுகூடிய சமூகப் பிரக்ஞை உணர்வும் இரண்டறக் கலக்கும்போது அப்பிரதி மிகுந்த கனதி உடையதாகின்றது எனலாம். அவ்வகையில், ஃபாயிஸா அலி தான் ஒரு பெண் என்ற நிலையிலும், ஓர் ஆசிரியை என்ற நிலையிலும், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதி என்ற நிலையிலும், ஒரு கவிதாயினி என்றவகையில் மானிடத்தின் அங்கத்தினள் என்ற நிலையிலும் தன் அகவெளி-புறவெளி இரண்டையும் இணைக்கும் ஒருபுள்ளியில் நின்றவாறு தனது கவிதைகளைப் படைத்தளித்துள்ளார். அதேவேளை, இக்கவிதை ஒவ்வொன்றும் எழுதப்பட்ட காலமும் நூலில் உள்ளடக்கப்பட்டு இருக்குமாயின் சிறப்பாக இருந்திருக்கும். ஒருசில கவிதைகள் இன்னும் சற்று செவ்வைப்படுத்தப்பட்ட பின் தொகுதியில் சேர்க்கப்பட்டு இருக்கலாமோ என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தத் தவறவில்லை. "லேபல்வழிபாடுகள்" (ப.59), "காதோரமாய்" (ப.61) ஆகிய கவிதைகள் அத்தகையவையே.

எவ்வாறிருப்பினும், சமூகவியல், அரசியல், பெண்ணியம், சூழலியம் எனப் பன்முகமான தளங்களில் அக்கறை கொள்ளும் வகையில் ஃபாயிஸா அலியின் கவிதைகள் அமைந்துள்ளன. அவற்றைத் தனக்கே வாலாயமான தனித்துவமான மொழியாளுகை ஊடே கவித்துவத்தோடு மனதை ஈர்க்கும் வகையில் முன்வைத்துள்ளார் கவிதைசொல்லி. அவ்வகையில் இத்தொகுதியில் அடங்கியுள்ள கவிதைகள் முக்கியமானவையே என்பதில் ஐயமில்லை.

**முற்றும்**

உதயம்
www.uthayam.lk

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வலம்வருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு வாசகர்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடுங்கள்...

## மனநலமும் ஆலோசனையும் 77

# பெண்ணின் பாத்திரங்கள்

ஆணும் சரி, பெண்ணும் சரி வாழ்க்கை பாதையில் பல பாத்திரங்களை ஏற்று வாழ்கின்றனர். இருவர் சுமக்கும் பாத்திரங்களும் இரண்டு வழிகளில் பயனுடையவை. அதில் ஒரு பெண் சுமக்கும் பாத்திரங்கள் பற்றி மேலோட்டமாக பார்ப்போம். மகள், மனைவி, மருமகள், மாமி, உம்மா, உம்மம்மா இப்படி அவள் வாழ்க்கையில் பல பாத்திரங்களை ஏற்கிறாள். இந்த ஒவ்வொரு பாத்திரமும் வித்தியாசமான அனுபவங்களை கொண்டதாக இருக்கும். அங்கு பல விடயங்களை சேர்க்க வேண்டியிருக்கும். பல விடயங்களை விட்டுவிட வேண்டியும் இருக்கும். காலமும் வயதும் அவளை பல தியாகங்களுடனும் பல விட்டுக் கொடுப்புகளுடனும் அழைத்துச் செல்லும். ஒரு பெண்ணின் வாழ்க்கை பயணம் அப்படித்தான் இருக்கும். இருக்கவும் வேண்டும். ஒரு பெண் ஏற்கும் பாத்திரங்களில் எத்தனையோ காட்சிகள் இருக்கும். அதில் எழுந்து நிற்க முடியாத வீழ்ச்சிகளும் இருக்கும். சந்தோசங்களும் இருக்கும். அவற்றை அனுபவித்து, சவால்களை முறையாக சந்தித்து பயணிக்கும் போது தான் அவள் வாழ்க்கை ஏற்றம் தரும். அமைதியும், அழகும், அர்த்தமும் தரும்.

வித்தியாசமான அனுபவங்களை சந்தித்து புதிய பரிணாமம் கண்டு வாழ்வுக்கு அர்த்தம் கொடுத்து படிப்பினைகள் பல தந்த ஒரு பெண்ணின் பாத்திரங்களில் சில துளிகளை படிப்பினைக்காக இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அவள் ஒரு ஆசிரியயை. கணவரும் ஒரு ஆசிரியர். பணிப் பொறுப்பில் இருவரும் உறுதியானவர்கள். அமைதி, நிதானம், அர்ப்பணம் கொண்ட கணவன். இருவரும் ஒன்றாக தொழிலுக்கு போய்க் கொண்டிருந்த அழகான காலம் அது. அவள் மனைவியாக ஏற்ற பாத்திரமும் தாயாக ஏற்ற பாத்திரமும் அழகாகவே மலர்ந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் ஆறு பேருக்கு சொந்தக்காரியானாள். மூவர் பெண் பிள்ளைகள். எல்லோரும் பள்ளிப் பிள்ளைகளாக இருக்கும் போதே திடீரென கணவன் நோய்வாய்ப்படுகிறான். ஒரு ஆலமரம் சாய்ந்தது போன்ற உணர்வு அவளுக்கு. நடக்கவோ, பேசவோ முடியாத நிலையை கணவன் அடைந்து விடுகிறான். கணவனை பார்க்கும் பொறுப்பு, பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பு, தொழிலை எப்படி தொடர்வது என்ற ஏக்கம் எல்லாமே ஒன்று சேர்ந்து அவளை ஒரு கனம் உசுப்பி விடுகிறது.

எழ முடியாத ஒரு வீழ்ச்சியை கண்டது போன்ற உணர்வு அவளுக்கு. என்ன செய்வது. ஆம்! அவள் விட்டுவிடவில்லை. கணவரை இழக்க விரும்பவும் இல்லை. இறைவா..! என் கணவரை காப்பாற்றித் தா, கடைசிவரை அவரை பார்க்கும் வரத்தையும் தந்துவிடு என்று வைத்தியசாலையில் இருந்து கொண்டே இறைவனை வேண்டினால்.

அவள் உடலும் உள்ளமும் ஏதோவொரு சோகத்தை அனுபவித்தாலும் அந்த சோகத்தில் வாழ மனதுக்கு இடம் தராமல், மலையில் நனைந்த சிங்கம் உடம்பை அசைத்து நீர்த் துளிகளை அகற்றிவிட்டு கம்பீரமாக எழுந்து போவது போல் அவளும் தன் கவலைகளை, ஏக்கங்களை அகற்றிவிட்டு ஏழாவது பிள்ளையாக கணவரையும் சேர்த்து தன் இலட்சியப் பயணத்தை ஆரம்பித்தாள். சுமார் இருபத்தி இரண்டு வருடங்கள் ஒரு கைப்பிள்ளையை கவனிப்பது போன்று தன் கணவரையும் கவனித்தாள். ஆகக் கூடினால் வெறும் இரண்டு மூன்று வருடங்கள் தான் ஒரு குழந்தையின் மலசலத்தை ஒரு தாய் துப்பரவு செய்வாள். ஆனால் இங்கு இருபத்தி இரண்டு வருடங்கள் தன் கணவரின் மலசலத்தை துப்பரவு செய்து, உணவு ஊட்டி, குளிப்பாட்டி கவனிப்பது என்பது எவ்வளவு கடினமான விடயம். அதுவும் ஒரு ஆசிரியராக இருந்து செய்வது என்பது மிகவும் கடினமானது.

ஆனால் அவளுக்கு அது பாரமாக தெரியவில்லை. வெறுப்புடன் செய்யவும் இல்லை. பார்வை மங்கி வயதுக்குப் போன தன் மாமியின் உதவியுடன் பிள்ளைகளையும் பராமரித்து தொழிலையும் செய்து கணவரையும் காத்து ஓய்வில்லாமல் ஓடினால். அந்த ஓட்டத்தில் ஆயிரம் தடைகள் இருந்தபோதிலும் அதில் அமைதி கண்டாள். எதிர்பாராத விதமாக அவளும் ஒரு நோயால் பாதிக்கப்பட்டாள். தளராத மனம் படைத்த அவள் அங்கும் அசந்து போகவில்லை. தன் தொழிலுக்கு பிரியாவிடை கொடுத்துட்டு கணவரையும் பிள்ளைகளையும் பார்க்கும் முழுநேர பொறுப்பை ஏற்றாள்.

தன் பிள்ளைகளை பண்பாடு கெட்டுப் போகாமல் உயர் தரம் வரை கற்பித்தாள். பொருத்தமானவர்களை தேடி மணம் முடித்து வைத்தாள். இருபத்தொரு பேரப் பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தாள். கணவர் பொறுப்பையும் தன் தலையில் சுமந்து தனிமரமாய் தளிர் விட்டாள். சொல்லிக் கொள்ள முடியாத எத்தனையோ சவால்களை சரியாக வெற்றி கொண்டாள். வெளியே சொல்லாத ஆயிரம் அனுபவங்கள் அவளுக்குள் இருந்திருக்கும். ஆயிரம் நோவுகள் சிறைபட்டிருக்கும். ஒருவர் ஏற்ற பாத்திரங்களின் பொறுப்பை பொறுப்பாக நிறைவேற்றும் போது வேதனைகளின் நோவுகள் புரிவதில்லை. அவளுக்கும் அப்படியே இருந்திருக்கும்.

அவள் பிள்ளைகள் எல்லோரும் திருமணமாகிய பிறகு, கணவர் காலம் சென்று காலங்கள் பல கடந்த பிறகு, ஒருவருக்கு ஒரு புத்திமதி சொல்லும் சந்தர்ப்பத்தில் அவளை அறியாமலே ஒரு சின்ன அனுபவம் வார்த்தைகளாக வெளிவந்தது. ”நான் என் கணவர் நோயுற்ற காலம் தொடக்கம் என்னைவிட்டு பிரியும் வரை என் கைகளில் மலத்தின் நாற்றத்தை உணராத நாட்கள் இருக்கவில்லை.” என்று சொன்னதை அறிந்த நான் அதிர்ந்து போனேன். நீண்ட காலம் கட்டிலோடு இருக்கும் நோயாளிகளுக்கு மலச்சிக்கல் வருவது சாதாரணமானது. அதை சுத்தம் செய்து வெளியேற்றுவது இலகுவான செயலல்ல. அதற்கெல்லாம் மற்றவரின் அருவருப்பற்ற அர்ப்பணம் தேவை. அழகான மனம் தேவை.

இந்த அர்ப்பணங்களை ஆசையோடு செய்தது வேறு யாரும் இல்லை. எனது மாமி. மனைவியின் தாய். மதிப்பிற்குரிய என் மாமியார் போன்று அர்ப்பணிப்புகள் பல செய்து மனம் தளராமல் தைரியமாக வாழும் பெண்கள் எம் சமூகத்தில் தாராளமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அல்லாஹ் அருள் நிறைந்த வாழ்வை வழங்க வேண்டும்.

தற்கால இளம் யுவதிகளுக்கு ஒரு சிறிய விடயத்தை உங்கள் மேலான சிந்தனைக்கு கொண்டு வர முயற்சிக்கிறேன். நீங்கள் உங்கள் குடும்பத்தில் நல்ல படித்தவராக இருக்கலாம். பட்டங்கள் பல பெற்றவராக இருக்கலாம். புதிய திறன்கள் பலவற்றை வளர்த்துக் கொண்டவராக இருக்கலாம். பெற்றோர்களும் வயதுக்குப் போன உறவுகளும் அறியாதவற்றை எல்லாம் அறிந்து வைத்தவராக இருக்கலாம். இருந்தாலும் பாடசாலையும் பல்கலைக்கழகமும் புதிய தொழில்நுட்பங்களும் கற்றுத் தராத பல பாடங்களை உங்கள் உம்மாவிடம் இருந்தும் மாமியிடம் இருந்தும் வயதுக்குப்போன உறுவுகளிடம் இருந்தும் கற்றுக் கொள்ளலாம். அவர்கள் பல அனுபவப் புத்தகங்களை கொண்ட வாசிகசாலை போன்றவர்கள்.

நீங்கள் சுமக்கும் அல்லது சுமக்கப் போகும் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தேவையான அறிவு, அனுபவங்களை அவர்களின வாழ்க்கை புத்தகத்தில் இருந்து கற்றுக் கொள்ள முடியும். உங்கள் வயதான உறவுகள் எவரோ அவர் உங்களுடன் இருந்தால் நீங்கள் ஒருவகையில் பாக்கியசாலி. அவர்களிடம் இருந்து வரும் குறைகளை முறையாக சமாளிப்போம். நல்ல அனுபவங்களை கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

ஒரு ஆனால் ஒருபோதும் செய்ய முடியாது பல சாதனைகளை ஒரு பெண் செய்கிறாள். அவளிடம் இயல்பாக இருக்கும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் அர்ப்பணிப்பும் ஒரு அழகான சமூக உருவாக்கத்தின் அடிப்படைகள். பெண்களின் தியாக உணர்வுகளின் அவசியத்தை பெண்கள் புரிந்து கொள்வதுடன் அவர்களின் உறவுகளும் அதை உணர்ந்து அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் கொடுத்து இந்த மண்ணில் அர்ப்பணிப்புடன் வாழ்வதற்கான இடத்தை கொடுக்கும் நல்லவர்களாக நாங்கள் ஆகுவோம். 21.04.2025 அன்று காலம் சென்ற என் மாமியாருக்கு அல்லாஹ் சுவனத்தில் உயர்ந்த இடத்தை கொடுக்க வேண்டும். இதை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் அருள் புரிய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறேன்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




**பயாஸா பாஸில்**

# மறந்து விடாதீர்கள்!



முதுமை அடையும் போது dementia என்னும் மறதி நோயினால் பாதிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம் நடு வயது தாண்டியவர்களுக்கு ஏற்படாமல் இருக்காது. தொழில் செய்யும் காலத்தில் சிறந்த நிர்வாகிகளாகவும் தொழில் அதிபர்களாகவும் இருந்து நூற்றுக்கணக்கானோரைத் திறமையாக நிர்வகித்தவர்களும், குடும்ப விவகாரங்களை ஆளுமையோடு கையாண்டவர்களும்கூட முதுமை அடைந்த பின்னர் நினைவை இழந்து விடுகின்றனர். தமது சொந்த வாழ்க்கைத் துணையையும் பிள்ளைகளையும்கூட யார் என்று தெரியாத அளவுக்கு அவர்களை மறதி ஆட்கொண்டு விடுகிறது. பிறர் உதவியின்றி எதையும் செய்து கொள்ளத் தெரியாத பரிதாபமான நிலைக்கு அவர்கள் ஆளாகி இருப்பதைக் காணும் போது, எதிர்காலம் பற்றிய பயம் எமக்கும் ஏற்படத்தான் செய்யும்.

அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்கும் அளவுக்கு நினைவு, சிந்தனை, சமூகத் திறன்கள் என்பன பாதிக்கப்படும் நிலைமையைத்தான் டிமென்சியா (dementia) என்பார்கள். சிற்சில சந்தர்ப்பங்களில் ஞாபக மறதி யாருக்கும் ஏற்படலாம். முதுமையை நெருங்கும் போது இந்தப் போக்கு அதிகரிக்கலாம். அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகள் சீர்குலையும் அளவுக்கு இந்த பாதிப்பு இருந்தால் மட்டுமே அதனை டிமென்சியா என்போம்.

டிமென்சியா ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அல்ட்ஸைமரின் நோய் (Alzheimer's disease) இவற்றுள் முக்கியமானது. மூளைக் கலங்களுக்கு இடையில் தகவல் பரிமாற்றத்தைத் தடுக்கும் வகையில் சில புரத வகைகள் மூளையில் ஒன்று திரள்வதாலேயே இந்நோய் ஏற்படுகிறது. முதியவர்களைப் பாதிக்கும் இந்த நோய்நிலை தொடர்ந்து மோசமாகிக் கொண்டே செல்லும். இதனை தடுத்து நிறுத்த சிகிச்சைகள் எதுவும் இல்லை.

இது தவிர பாரிசவாதத்தை ஏற்படுத்தும் மூளைத்தாக்கு (stroke), பார்க்கின்ஸனின் நோய் போன்றவற்றின் விளைவாகவும் கடுமையான ஞாபக மறதி ஏற்படலாம். அவ்வாறான காரணம் எதுவும் இல்லாமலே ஒருவருக்கு டிமென்சியா ஏற்படக்கூடும். விட்டமின் குறைபாடு, தைறொயிட்டுப் பிரச்சினை போன்றவற்றின் விளைவாக ஏற்படும் ஞாபக மறதியை சிகிச்சை மூலம் சரி செய்து விட வாய்ப்புண்டு. ஏனைய டிமென்சியா வகைகளில் சிகிச்சைகள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த மாட்டா.

டிமென்சியா வராமல் தடுத்துக் கொள்ள வழி உண்டா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இருக்கும். டிமென்சியாவைத் தடுக்கும் என உறுதியாகச் சொல்லக்கூடிய வழிமுறைகள் எதுவும் இல்லை. எனினும் டிமென்சியா வரும் ஆபத்தைக் குறைப்பதற்குரிய வழிகள் பல சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கீழே தருகிறேன்.

1. மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருங்கள். பல்வேறு விடயங்கள் பற்றிய நூல்களை வாசித்தல், வித்தியாசமான பாட நெறிகளைப் பின்பற்றுதல், புதிர்கள், விடுகதைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்றவற்றைத் தீர்த்தல் அல்லது விடுவித்தல், புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளுதல் போன்ற செய்யற்பாடுகளில் ஆர்வதோடு ஈடுபட வேண்டும். சதுரங்கம் (chess) போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுதல், புதிய மொழி ஒன்றைக் கற்றல் போன்றன மூளைக்குச் சவால் விடுவனவாக இருக்கும்.

“வயோதிபத்தை அடைந்து விட்டோம் இனிமேல் அமைதியாக இருந்துவிட வேண்டும்“ என நினைத்து சோம்பலோடு காலத்தைக் கழித்தால் மூளையின் செயல்திறன் விரைவில் மந்தமாகிப் போகும்.

2. தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபடுதல். வாரத்திற்கு 150 நிமிடங்கள் மிதமான உடற்பயிற்சிகளில் (நடத்தல், நீந்துதல், சைக்கிள் ஓட்டுதல் போன்றவற்றில்) ஈடுபட வேண்டும். உடற்பயிற்சியின் விளைவாக மூளைக்கு போதிய அளவு ரத்த ஓட்டம் நிகழும். இது ஞாபகத்திற்கும் சிந்தனைக்கும் துணை புரிகிறது.

3. மூளையின் ஆரோக்கியத்திற்கு துணை செய்யும் உணவுகளை உட்கொள்ளல். பழங்கள், மரக்கறிகள், தானியங்கள், மீன் வகைகள், ஒலிவ் எண்ணெய், வித்துக்கள் (nuts) முதலியன இந்த வகையில் நன்மை பயக்கும். அதிக அளவு உப்பு, சீனி, நிரம்பிய கொழுப்பு முதலியவற்றை முடிந்த அளவு தவிர்த்துக் கொள்ளுங்கள். புகைத்தல் முற்றாக தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

4. சமூகத் தொடர்புகளை பேணுங்கள். முதுமையில் தனிமைப்பட்டு போகாமல் இருப்பதற்கு கழகங்கள், சங்கங்கள் போன்றவற்றில் இணைந்து செயல்படுங்கள். நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். தனிமைப்பட்டு ஒதுங்கிப் போவது டிமென்சியா ஆபத்தை அதிகரிக்கச் செய்யும்.

5. உங்கள் நித்திரையில் கவனம் செலுத்துங்கள். தினமும் 7-8 மணித்தியாலம் நிம்மதியான தூக்கம் தேவை. நித்திரையில் மூச்சுத் திணறுதல் (sleep apnea) போன்ற வருத்தங்கள் ஏதும் இருப்பின் அவற்றுக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

6. உயர் குருதி அழுத்தம், மிகை கொலஸ்ட்ரால், நீரிழிவு போன்ற நிலைமைகளை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். இவை மூளையின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

7. தலையில் அடிகள் படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பிரயாணம் செய்யும்போது helmet, seat belt போன்றவற்றை பயன்படுத்துங்கள். வயோதிப காலத்தில் வழுக்கி அல்லது கால் இடறி விழுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

8. தொடர்ச்சியான மன அழுத்தமும் (stress), உளச்சோர்வும் (depression) மூளையின் ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கும். இந்த நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இறை தியானம், பிரார்த்தனைகள் முதலியவற்றின் மூலம் மன அமைதியைப் பேணிக் கொள்ளுங்கள்.

(Hafiz Issadeen)



அரபாத் பஹுர்தீன்



# மகளிர் முக்கோண ஒருநாள் தொடர்: தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இலங்கை

தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு எதிரான முக்கோண ஒருநாள் தொடரின் 3ஆவது லீக் ஆட்டத்தில் சகல துறையில் அசத்திய இலங்கை மகளிர் அணி 5 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைத் தனதாக்கி புள்ளிப் பட்டியலில் 2ஆம் இடத்திற்கு முன்னேறியது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மகளிர் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரில் போட்டிகளை நடாத்தும் இலங்கை அணியுடன், இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இத் தொடரில் பங்கேற்று வருகின்றது. அதற்கமைய ஒரு அணி மற்றைய இரு அணிகளுடனும் தலா இரு லீக் போட்டிகளில் மோதி புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடாத்தும்.

அதற்கமைய இலங்கை அணி இந்திய அணிக்கு எதிராகப் பங்கேற்ற முதல் போட்டியில் தோல்வி அடைந்திருக்க இரண்டாவது போட்டியில் நேற்றைய தினம் தென்னாபிரிக்க மகளிர் அணியை கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் எதிர்கொண்டது.

போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பாடும் வாய்ப்பினை தென்னாபிரிக் காவிற்கு வழங்கினர். இதன்படி முதலில் துடுப்பாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை எடுத்தனர். துடுப்பாட்டத்தில் அன்னி டெர்க்ஸன் ஆட்டமிழக்காது 61 ஓட்டங்கள் எடுக்க, லாரா குட்டால் 46 ஓட்டங்கள் பெற்றார். இலங்கை பந்துவீச்சில் மால்கி மாதரா 4 விக்கெட்டுக்களையும், தேவ்மி விஹாங்கா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பின்னர் தென்னாபிரிக்க மகளிர் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 236 என்ற சவால் மிக்க வெற்றி இலக்கினை அடைய பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை மகளிர் அணி 46.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியை பதிவு செய்தது. இலங்கை மகளிர் அணியின் வெற்றியினை உறுதி செய்த ஹர்சிதா சமரவிக்ரம தன்னுடைய நான்காவது அரைச்சதத்தோடு 77 ஓட்டங்கள் எடுக்க, கவீஷ டில்ஹாரி 61 ஓட்டங்கள் பெற்றார். தென்னாபிரிக்க அணி சார்பில் பந்துவீச்சில் நொன்குலுலேக்கோ லாபா 2 விக்கெட்டுக்கள் சாய்த்தார். இப் போட்டியின் ஆட்டநாயகியாக ஹர்சிதா சமரவிக்ரம தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை அந்நூரியன்ஸ் முக்கோண கிரிக்கெட் போட்டி



(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான முக்கோண கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

அந்நூரியன்ஸ் 97 அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போட்டியில் 94, 95 மற்றும் 97 ஆகிய பழைய மாணவர் அணிகள் பங்குபற்றின.

இதன் இறுதிப்போட்டிக்கு 94, 97 ஆகிய அணிகள் தெரிவான நிலையில் நிர்ணயிக்கப்பட்ட 94 ஓட்ட எண்ணிக்கையை வெற்றி கொண்டு 97 அணியினர் சம்பியன் கிண்ணத்தை சுவீகத்துக்கொண்டனர்.

எஸ்.எம்.ஏ.ஹாதி தலைமையில் இடம்பெற்ற குறித்த போட்டியின் ஆட்டநாயகனாக 97 அணியைச் சேர்ந்த எம்.கியாஸ், தொடர் ஆட்டக்காரனாக 94 அணியைச் சேர்ந்த எஸ்.எச்.பைஷல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# 119 வருடங்களின் பின்னர் இலங்கை வந்தது நியூஸிலாந்து ரக்பி அணி




இலங்கைக்கு எதிரான 85 கிலோகிராம் எடைப்பிரிவிற்கு உட்பட்ட ரக்பி போட்டியில் பங்கேற்கவுள்ள நியூஸிலாந்து ரக்பி அணி இலங்கையை வந்தடைந்துள்ளது.

1906ஆம் ஆண்டிற்கு பின்னர் நியூஸிலாந்து ரக்பி அணி இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இலங்கை – நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி 2 கட்டங்களாக நடைபெறவுள்ளது. முதலாவது கட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதியும் இரண்டாவது கட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. போட்டிகளை கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மினுவாங்கொடை ஆஷிக் நஸீர் சர்வதேச மொய்தாய் போட்டியில் தங்கம் வென்று அசத்தினார்



(ஏ. சி பௌசுல் அலிம்)

மினுவாங்கொடை கல்லொலுவை சேர்ந்த 19 வயதான வீரர் ஆஷிக் நஸீர், 2025 ஏப்ரல் 20ஆம் திகதி கொழும்பு ரோயல் மாஸ் அரங்கில் நடைபெற்ற சர்வதேச மொய்தாய் லீக் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், “சிறந்த அதிரடி வீரர்” பட்டத்தையும் வென்று இலங்கை விளையாட்டு வரலாற்றில் புதிய பக்கத்தை எழுதினார்.

23 வயதிற்குட்பட்ட 60 கிலோ பிரிவில் போட்டியிட்ட நஸீர், இலங்கை, மாலைத்தீவு, பங்களாதேஷ், ஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, நெதர்லாந்து, லிதுவேனியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பல்துறை வீரர்களை வீழ்த்தி வெற்றியைத் தம் வசமாக்கினார்.

மின்னல் வேகமுடன் நுட்பமான தாக்குதல்களை நிகழ்த்தும் திறன், துல்லியத் தையும் தைரியத்தையும் ஒருங்கிணைத்த அவரது நடிப்பு, உலக நாடுகளிலிருந்து வந்த பயிற்சியாளர்களையும் பார்வையாளர்களையும் திகைக்க வைத்தது.

“இந்த வெற்றி எனது மட்டுமல்ல, எனக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்குமானது. இலங்கையின் பேறான மண்ணை சர்வதேசத்துக்கு காட்ட முடிந்தது எனக்கு பெருமை அளிக்கிறது,” என்று நஸீர் உணர்வுபூர்வமாக தெரிவித்தார்.

இன்று, மினுவாங்கொடை மக்களிடையே இவர் நம்பிக்கையின் ஒளிக்கிளை. இளம் தலைமுறைக்கு ஊக்கமளிக்கும் முன்னோடியாகவும், சர்வதேச மொய்தாய் உலகில் விரைவில் பரிணாமமாகும் இலங்கை சக்தியாகவும், ஆஷிக் நஸீர் எழுந்திருக்கிறார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.